# அறைகூவல்

₹10

fmpb

Volume 51 Issue 9 September 2021

**அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள்
என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல்
கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்;
அதற்கு இயேசுகிறிஸ்து தாமே
மூலைக்கல்லாயிருக்கிறார்.**

(எபே. 2:20)






இயேசுகிறிஸ்துவினால் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஆதி அப்போஸ்தலர்கள் அனைவரும் மிகவும் சாதாரணமானவர்களே. ஆனால், அவர்களை அசாதாரணமானவர்களாக இயேசு மாற்றினார். அவர்கள் தங்களது சமுதாயத்தில் அறிஞர்களாகவோ, போதகர்களாகவோ காணப்படவில்லை. அவர்களுக்கென எந்தச் செல்வாக்கோ, அந்தஸ்தோ, தனித்துவமான திறமைகளோ இல்லை. அந்தப் பன்னிருவர்களில் ஒருவருக்குக்கூட சிறப்பான ஆளுமைத்தகுதி அம்சங்களோ (resume) இல்லை; அவர்களில் ஏழுபேர் சாதாரண மீனவர்களே என்பது குறிப்பிடத்தக்கது!

ஆதி அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவால் பிரத்தியட்சமாக அழைக்கப்பட்டு அவரைப் பின்பற்றி வந்தப்பின்னரும், அவர்கள் மனித சுபாவங்களினால் நிறைந்திருந்தனர். அவர்கள் தீவிரமாகக் கிறிஸ்துவை விசுவாசிக்க முயன்றனர்; ஆனால், எப்படி அவரை விசுவாசிப்பது என்று அறியாதிருந்தார்கள். அவர்கள் தைரியமாக இருக்க விரும்பினார்கள்; ஆனால், கோழைத்தனமே பெரும்பாலும் அவர்களிடம் காணப்பட்டது. மற்றவர்களை நேசிக்கவும், சுயத்தை வெறுக்கவும் ஆசித்தார்கள்; ஆனால், சிலசமயங்களில் ஆணவம், அகங்காரம் மற்றும் சூழ்ச்சிகளோடு காணப்பட்டனர். அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் இருக்க விரும்பினார்கள்; ஆனால், அவர்களால் அதிலும் முழுவெற்றி காணமுடியவில்லை. அவர்கள் கிறிஸ்துவிடம் அன்பைக் கற்றுக்கொண்டதோடு, பிறருக்கும் அந்த அன்பைக் கற்றுக்கொடுத்தார்கள்; ஆனால், தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டு வாக்குவாதம் பண்ணினார்கள். அவர்கள் அநேக சமயங்களில் மிகுந்த விசுவாசத்துடன் காணப்பட்டார்கள்; ஆனால், சிலசமயங்களில் அவர்களிடம் காணப்பட்ட அற்ப விசுவாசத்தை இயேசுவே கண்டு அவர்களைக் கண்டித்தார். அவர்கள் கிறிஸ்துவிடம் ஜெபிக்கக் கற்றுக்கொண்டார்கள்; ஆனால், கெத்செமனே தோட்டத்தில் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலைகளில் ஜெபிக்க இயலாமல் போராடினார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவை மிகவும் நேசித்தார்கள், தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இயேசுவை தனித்து விட்டுவிட்டுத் தப்பியோடினார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குச் சென்றப்பிறகு, மாம்சீக பெலவீனங்களோடு காணப்பட்ட இந்தப் பன்னிருவரின் வாழ்க்கையையும் பரிசுத்த ஆவியானவர் மாற்றினார்; அதனால் இவர்கள் ‘உலகத்தைக் கலக்குகிறவர்களாக மாறினார்கள்’ (அப்.17:6). பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு உட்பட்டப்பின்னர், இவர்கள் எதிர்ப்பைக் கண்டுச் சற்றும் சளைக்காமல் காணப்பட்டதோடு, இயேசுவை கொலைசெய்ய உத்தரவிட்ட யூத உச்ச நீதிமன்றம் இவர்களைக் கல்லால் அடித்து சித்திரவதைக்கு உட்படுத்திய போதும், தலைதுண்டிக்கப்பட ஒப்புவிக்கப்பட்டபோதும், கிறிஸ்துவை புகழ்ந்துப்பாடி, ஆண்டவரின் நாம மகிமைக்காக விசுவாசத்தில் வேரூன்றி நின்று, தாங்கள் கொலைசெய்யப்படுவதற்கும் தங்களை முழுமனதுடன் ஒப்புக்கொடுத்தனர் (அப். 4:8-12; 5:40-42). யோவானையும், யூதாசையும் தவிர மற்ற 10 அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவின் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். ஆம், இவர்கள் சுவிசேஷத்தீப்பிளம்பாக மாறி, உலகம் முழுவதும் பரவி, பல நூற்றாண்டுகளாக இன்றும் பிரகாசமாக ஜொலிக்கிறார்கள்; இவர்களுடைய தியாகத்தால் கிறிஸ்தவம் உலகமெங்கும் பிறந்தது.

இயேசுகிறிஸ்துவினால் நேரடியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த ஆதி அப்போஸ்தலர்கள் இன்று யாரும் உயிரோடு இல்லையென்றாலும், அவர்களது ஊழியச்செயல்பாடுகள் மிஷனெரிப்பணியாக இன்றும் தொடர்கிறது. ஒருவிதத்தில், இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாமும் அவருடைய அப்போஸ்தலர்களாகச் செயல்பட அழைக்கப்படுகிறோம். (மத். 28:18-20; 2கொரி.5:18-20). ஆம், நமது ஆண்டவர் நம்மை அவரது நற்செய்தித்தீப்பொறிகளாக, தீப்பிளம்புகளாக இருக்க வேண்டுமென விரும்புகிறார். நாம் நீலஜுவாலையாகக் கொழுந்துவிட்டெரிகிற, அனலூட்டம்பெற்ற, பிறரை அனலூட்டுகிற மிஷனெரி தரிசனத்தீப்பொறிகளாக தேவராஜ்யத்தை தேசமெங்கும் கட்டியெழுப்ப வேண்டுமென்பதே ஆண்டவரின் திருவுளசித்தம். இது தொடர்பாக எபிரெயர் 1:7-ல் சொல்லப்பட்டுள்ளபடி, தேவன் ‘தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார்’ என்பது ஆண்டவர் நமக்கு அருளும் வாக்குத்தத்தமாய் இருக்கிறதன்றோ!

- **JJ. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

“இன்றைய அவசரத் தேவை – கிறிஸ்துவின் வார்த்தையில் உறுதியாக நங்கூரமிட்ட புதிய தலைமுறை அப்போஸ்தலர்கள் எழும்புவதே! ஏனெனில், அவர்கள்தான் நமது இக்காலத்துச் சவால்களுக்குப் பதிலளிப்பவர்களாகவும், சுவிசேஷத்தைத் தொலை தூரத்திற்குப் பரப்பத்தக்கவர்களாகவும் அமையக்கூடும்.” – போப் பெனடிக்ட் XVI

“இயேசு அறையப்பட்ட சிலுவையே, அவருடைய அப்போஸ்தலரும் அறையப்பட்ட சிலுவையாக மாறியது. இழப்பு, நிராகரிப்பு, அவமானம் ஆகியவை கிறிஸ்துவுக்கும், உண்மையில் அவரைச் சார்ந்தவர்களுக்கும் சொந்தமானது. அவர்களுக்கு மீட்பைத் தரும் சிலுவையே, அவர்கள் கொல்லப்படுவதற்குமுரிய சாதனமாகிறது. இக்கருத்திற்கு உட்படாதது எதுவும் போலியான நம்பிக்கை கொண்டதேயல்லாது, உண்மையானதல்ல.”
– A.W. டோஸர்

“ஆதி அப்போஸ்தலர்களைப் போல, உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும், உலகில் பார்வைக்குச் சிலுவையின் பைத்தியமாக அழைக்கப்படத் தயாராக இருக்கும் ஓர் அர்ப்பணிப்புள்ள சிறுகூட்டமே, இன்று நமக்கு அவசியம்!” – வான்ஸ் ஹவ்னர்

தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். 1கொரி.12:28

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுகாரியதரிசியிடமிருந்து...

கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறை வேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்கு தாரர்களே,

நமது இரட்சகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள ஈடுஇணையற்ற நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்!

## தரிசனத்தைத் தெளிவாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தன்மைகள்:

அப்போஸ்தலர் நடபடிகள் 6-ம் அதிகாரத்தில் கிரேக்கர்கள், அன்றாடக உணவு விநியோகிப் பதிலே தங்களது விதவைகள் சரியாக நடத்தப்படவில்லையென்று எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுத்தபோது, அப்போஸ் தலர்கள் அவ்வேலையை மேற்பார்வையிட 7 பேரைத் தெரிந்தெடுக்கப் பரிந்துரைத்தனர்; இதனால், ஜெபம் மற்றும் தேவ வசனத்தைப் போதிப்பதற்கான அவர்களின் அழைப்பும் அர்ப்பணிப்பும் பாதிக்கப்படவில்லை. இது குறித்து 6-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில், “ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றி ருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக் காக ஏற்படுத்துவோம்” என்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த அட்டவணையில் தேவையான மற்றும் எதிர்பார்க்கும் குணாதிசயங்களாக பரிசுத்த ஆவி, ஞானம் மற்றும் நற்சாட்சியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சாதாரண வேலைக்கே உயர் குணாதிசயங்கள் தேவை என்பதை இங்கு அறிகிறோம். அவ்வாறாக, தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டதால், அப்போஸ்தலர் 6:7-ல் குறிப் பிட்டுள்ளபடி, “தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.”

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டு முக்கியமான பாடங்கள் என்ன வெனில், நாம் மிஷனெரிப்பணியாற்றுவதற்கு அல்லது மிஷனெரிப்பணிக்கென ஜெபம் மற்றும் பொருள் ஆதரவுகளைத் திரட்டுவதற்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்கள் எவ்விதத்திலும் நமக்கு அவசியம். இரண்டா வதாக, நமது ஊழியவாழ்வின் பிரதானமான நோக்கம், அழிகின்ற மாந்தர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதாகும்; அதை நமது வேறு எந்தப்பணியும் திசைமாறச் செய்திட கூடாது. எனவே அந்த முழுமையான குணாதி சயங்களை தேவன் நமக்கு அருளிச் செய்ய வேண்டுமென்று நாம் ஜெபிப்பதோடு, நாம் எவ்வகையில் இம்மிஷனெரிப் பணியில் ஈடுபட்டாலும் நம் தேச மக்களுக்கு நற் செய்தியை எடுத்துச் செல்லும் நமது பிரதான நோக்கத்தில் தனி கவனம் செலுத்த வேண்டும்.

## நடைபெறவிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்:

இந்த செப்டம்பர் மாதம் நமது இயக்கத்தின் மூலம் பல கூட்டங்கள் ஒழுங்குச் செய்யப் பட்டுள்ளது; அதற்கு உங்களது மனமுவந்த ஜெபங்கள் அவசியம் தேவைப்படுகிறது. நமது இயக்கத்தின் நிதி மேலாண்மைகுழு கூட்டம் செப்டம்பர் 11-ம் தேதியும், அதைத் தொடர்ந்து 15 முதல் 17-ம் தேதி வரை நமது ஊழியத் திட்டக்கூடுகை, ஒருநாள் உபவாச ஜெபத்தோடு நடைபெற இருக்கிறது. மேலும், 25-ம் தேதி நமது இயக்கத்தின் செயற்குழு கூட்டமும், 26-ம் தேதி பொதுக்குழு கூட்டமும் நடைபெற உள்ளது.

## ஊழியப் பொறுப்புக் காலங்களை நிறைவு செய்யும் பொருளாளர் மற்றும் செயற்குழு அங்கத்தினர்களுக்கு நன்றி:

நமது இயக்கத்தின் தற்போதைய செயற்குழு, இந்த 2021 செப்டம்பர் மாதக் கூடுகையோடு தனது 3 வருட காலத்தை நிறைவு செய்கிறது. மற்றும் நமது அன்பான பொருளாளர் திரு. மணி சாமுவேல் அவர்கள் தனது 6 வருடக்கால பொருளாளர் பணியை நிறைவு செய்கிறார்கள். 6 வருடங்கள் பொருளாளராகத் திறம்பட பணி செய்த நமது பொருளாளர் திரு. மணி சாமுவேல் அவர்களுக்கும், நமது இயக்கத் திற்குச் சிறப்பாகச் சேவை செய்த அனைத்து செயற்குழு அங்கத்தினர்களுக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவிக்கிறேன். தேவன் இவர்கள் அனை வருக்கும் பரலோகத்தின் பொக்கிஷத்திலிருந்து அதற்குத் தக்கதான பலன்களை நல்குவாராக.

## தேசிய மிஷனெரிப் பயிற்சி மைய விஜயம்:

ஆகஸ்டு முதல் வாரத்தில் ஜான்சியில் உள்ள நமது மிஷனெரிப் பயிற்சி மையத் திற்குச் சென்று, 'கலாச்சாரம் கடந்து ஊழியம் செய்தல்' என்ற தலைப்பின் கீழ் பாடங்களைக் கற்பித்து வந்தேன். அங்கிருந்து 6 மிஷனெரிப் பயிற்சியாளர்கள் செப்டம்பர் இறுதியில் தங்கள் பயிற்சியை முடித்துவிட்டு, பணித் தளங்களுக்குச் செல்வார்கள். ஆகஸ்டு 1-ம் தேதி முதல் தொடங்கப்பட்டுள்ள 10 மாத மிஷனெரிப் பயிற்சியில் மேலும் 24 பேர் இணைந்துள்ளனர். கடந்த ஜுலை 24-ம் தேதி நடந்த மிஷனெரித் தேர்வுக்கான நேர்காணலில் 8 பேர் தெரிந்தெடுக்கப்பட்டு, பணித்தள முன்அனுபவங்களைப் பெறுவ தற்காக வெவ்வேறு பணித்தளங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தேவன் நமக்கு அளித்துள்ள இப்புதிய பயிற்சி மிஷனெரி களுக்காக தேவனைத் துதிப்போம்; அதோடு, இந்த பயிற்சி மிஷனெரிகள் தேவனின் கரங்களில் சிறந்தப் பாத்திரமாக உருவாக்கப்பட வேண்டுமென நமது ஜெபங் களில் அவர்களை நினைத்துக் கொள்வோம்.

## ஊழிய மண்டலப் பொறுப்பாளர்கள் நியமனம்:

நமது இயக்கத்தின் செயற்குழு, பணித்தளச் செயலாளராக அருள்திரு. சாலமோன் ஞான சேகரையும், தென்னிந்திய விரிவுப்பணி செயலாளராக அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்கையும் நியமித்துள்ளது. இந்த அன்பான சகோதரர்கள் இருவரும், நமது இயக்கத்தில் நீண்ட ஆண்டுகள் ஊழியம் செய்தும், நிர்வாகப் பொறுப்புகளை வகித்தும் வருகின்றனர். தயவுசெய்து இவ்விருவருக்காகவும், இவர் களுடைய குடும்பத்தாருக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## முக்கிய சந்திப்புகள்:

திருச்சி-தஞ்சை சி.எஸ்.ஐ பேராயத்தின் பேராயர் மாமறைதிரு. அறிவர். தன்ராஜ் சந்திரசேகரன் அவர்களைக் கடந்த ஜுலை 27-ம் தேதி நமது இயக்கத்தின் சில மூத்த பொறுப்பாளர்களுடன் சந்திக்க தேவன் வழிநடத்தினார். மதிப்பிற்குரிய பேராயர் அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று, நமது ஊழியத்துடன் தொடர்புடைய முக்கியமான தேசிய கரிசனைகளைக் குறித்து எங்களோடுகூட கலந்துரையாடினார்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் இந்த செப்டம்பர் 2-ம் தேதி, வடக்கு இவாஞ்சலிக்கல் லூத்தரன் திருச்சபைகளின் மாடரேட்டரான மாமறைதிரு. பாஜெல் முர்மு அவர்களை நமது சில மூத்த பணித்தளப் பொறுப்பாளர்களுடன் சேர்ந்து சந்திக்கவிருக்கிறேன். திருச்சபைத்தலைவர்கள் தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திக்கிற நமது மிஷனெரிப்பணிக்கு அளித்து வருகிற ஆதர விற்காக தேவனை மிகவும் துதிக்கிறேன்.

உங்களனைவரையும் எங்கள் ஜெபங்களில் தாங்குகிறோம்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**

# மிஷனெரிப் பணித்தளத்தில் அப்போஸ்தல ஊழியங்கள்!



*“அவர் சகல ஜாதி களையும், அவர்களுக்குள் இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும், தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச்செய்திருக்கிறார்.” (ரோமர் 1:6-7)*

'அனுப்பப்பட்டவர்கள்' என்று அர்த்தம் கொண்ட அப்போஸ்தலர்கள் திருச் சபையின் வளர்ச்சிக்கு தங்கள் உயிரையே தியாகம் செய்தவர்களாகக் காணப்பட்டனர். பல்வேறு பின்புலத்தைக் கொண்டிருந்த அப்போஸ்தலர்கள், தங்களின் அர்ப்பணிப்பு, ஒற்றுமை, பரிசுத்த ஆவியின் நிறைவான வழிநடத்துதல் ஆகியவைகளின் மூலம் அற்புதமான விளைவுகளை நடப்பித்தனர். அன்று அப்போஸ்தலர்கள் நிறுவிய சபைகள்தாம் பலுகிப்பெருகி இன்று வையகமெங்கும் வியாபித்து இருக்கின்றன. இந்த உன்னத நிகழ்வு ஒரே இரவிலே நிகழ்ந்த அற்புதம் அல்ல. பரமேறுமுன் பரமன் கொடுத்த கட்டளையைச் சிரமேற்று, பாரெங்கும் நற்செய்தியினை அப்போஸ்தலர்கள் எடுத்துச் சென்றனர். இயேசுவின் அழைப் பினை ஏற்றுக்கொண்டு, குடும்பத்தைத் துறந்து அவர் பின் சென்றவர்கள், இயேசுவின் பரமேறுதலுக்குப்பின் நாடு நாடாகச் சென்று நற்செய்தியினைப் பறைசாற்றினர்.

அந்தக்கால மத தீவிரவாதிகளால், நற் செய்தியைக் கூறாமலிருக்க மிரட்டப்பட்டனர்; மீறி, ஊர்ஊராகச் சென்று நற்செய்தி யினை எடுத்துரைத்தபோது அடிக்கப் பட்டனர்; அநேக ஜனங்கள் நற்செய் திக்குச் செவிமடுத்து இயேசுகிறிஸ்துவின் அடியவர்களானபோது அப்போஸ்தலர்கள் சிறைக்குள் தள்ளப் பட்டு சித்ரவதைக்குள்ளா யினர். இறுதியில் தங்கள் இன்னுயிரையும் நற்செய்தியின் நிமித்தம் இழந்தனர். மிரட்டலால், உடல்ரீதியான துன்புறுத்துதலால், சிறைக்குள் தள்ளி சித்ரவதை செய்வதால் நற்செய்தி பரவுவது தடைபட்டுப்போம்; இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் பின் வாங்கிப்போவார்கள்; நற்செய்தியைப் பிரசங்கிக்க நானிலத்தில் எவருமிலர் என்ற நிலை வரும் என நினைத்த எதிர்ப்பாளர்கள் வெட்கத்தால் நாணிப் போனார்கள். நாள்தோறும் விசுவாசிகள் சபைகளில் சேர்க்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம் (அப்.2:47).

மேலும் விசுவாசிகள் உயிர் பயத்தினால் பின்வாங்கிப்போகாமல், விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அந்த ஊரை விட்டுச் சிதறி எங்கும் ஓடிப்போனார்கள். ஆனாலும் போன இடத்திலெல்லாம் நற்செய்தியை அறிவித்தவண்ணம் சென்றார்கள் என்று வாசிக்கிறோம் (அப்.8:4).

**இப்படிப்பட்ட அற்புதமான காரியங்கள் இன்றும் நடக்கிறதா? சபைகள் விசுவாசி களால் பெருகுகிறதா? நற்செய்தியின்**

**நறுமணத்தைப் பரப்புவதற்கு அன்றைய கால அப்போஸ்தலர்கள் போல இன்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் உள்ளனரா?** இந்தியா சந்திக்கப்பட வேண்டுமே, கிராமந் தோறும் திருச்சபைகள் உருவாக வேண்டுமே என்ற தாகத்தோடு இருக்கின்ற ஒவ்வொரு விசுவாசிகளின் மனதிலும் இப்படிப்பட்ட கேள்விகள் இருக்கலாம்.

ஆம்! திருச்சபையின் நாயகனான நமதாண்டவர் இயேசுகிறிஸ்து தடைகளைத் தகர்த்து முன்செல்பவராகவே இருப்பதால், நற்செய்தியின் பணிகள் எந்தவிதத் தொய்வும் இல்லாதபடி இன்றும் நமது பணித்தளங்களில் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. இந்தியா முழுவதிலும் செய்யப்படுகின்ற நற்செய்திப் பணியின் மூலமாகத் தினமும் ஆயிரம் பேராவது இயேசுவின் அன்பை ருசிக்கின்றனர். இந்தியாவின் எங்கோ ஒரு மூலையில் தினமும் ஒரு புது சபையாவது உருவாகிறது. இது ஏதோ ஆதாரம் இல்லாமல் சொல்லப் படுகிற பசப்பு வார்த்தையல்ல, நிஜமானது! ஆம், அப்போஸ்தலர் நாட்களில் நடந்த ஊழியத்தைப் பற்றியும், நம் நாட்களில் நமது பணித்தளங்களில் நடந்துகொண்டிருக்கிற ஊழியங்களின் விளைவுகளைப் பற்றியும் கீழே காணலாம்.

## *1. ஒருமனப்படல் மற்றும் கர்த்தருக்குக் காத்திருத்தல்:*

ஒருமித்த கருத்துடன் ஒருமனப்படல் என்பது பொதுவாகவே எல்லாக் காரியங் களிலும் வெற்றிக்கு ஒரு காரணமாக எண்ணப்பட்டாலும், கிறிஸ்தவ ஊழியங் களில் வெற்றிக்கு அடிப்படையாகவே கருதப்படுகிறது. ஏனெனில், ஊழியத்தின் வெற்றியைச் சகித்துக்கொள்ளாத சாத்தான் முதலில் ஊழியர்கள் மத்தியில் கொண்டுவருவது பிரிவினையைத்தான். கிறிஸ்துவுடன் வாழ்ந்து ஊழியக் காரி யங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலும், அப்போஸ்தலர்கள் உலகப்பிரகாரமான எண்ணங்களிலிருந்து தங்களை முற்றிலுமாக விலக்கிக் கொண்டிருக்கவில்லை. **வாக்குவாதங் களும், அவசரமாகக் காரியங்களைச் செய்யும் தன்மையும் நிறைந்திருந்த சீடர்கள், கிறிஸ்து பரமேறின பின் ஒருமித்த மனதுடன் காரியங்களைப் பொறுமையாகச் செய்யக்கூடியவர்களாக மாறிவிடுகின்றனர். கிறிஸ்து பரமேறு வதற்கு முன்பு, எருசலேமை விட்டுப் போகாமல் காத்திருக்கும்படி சீடர்களுக்கு அறிவுறுத்தினார். அதன்படி அனைத்து சீடர்களும் எருசலேமில் கூடியிருந்து ஒருமனப்பட்டு ஜெபத்திலே தரித்திருந்தனர் என்று பார்க்கிறோம்.**

பணித்தளத்தில் சபை ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெறுகிறது என்றால், அது ஒருசில நாட்களிலே தனி மனிதனால் செய்யப்படுகின்ற ஒன்றல்ல. வீதியிலே பிரச்சாரத்தை ஆரம்பித்து, வீடுகளில் கூடுகின்ற சிறு ஆராதனை கூட்டமாக மாறி, பின்பு அந்தக் கூடுகை ஒரு சபையாக உருவெடுத்து, அந்தக் கிராமத்திலே ஆலயம் கட்டப்பட்டு, சபையின் ஆவிக்குரிய காரியங்களைக் கவனித்துக்கொள்ள உள்ளூர் ஊழியர்களையெழுப்பி அவர் களுக்குத் தேவையான பயிற்சிக்கொடுத்து, சபையின் நிர்வாகத்தினைக் கவனித்துக் கொள்ள சபையிலிருந்து ஆட்களைத் தேர்வு செய்து நிர்வாகக் குழுவினை நிறுவி, அந்தச் சபையின் காணிக்கைகள் மூலம் ஊழியர்களின் மற்றும் சபையின் மாதாந்திர தேவைகளைச் சந்திப்பது மட்டுமல்ல, பிற இடங்களுக்கும் சபையின் சார்பாக ஊழியர்களை அனுப்பும் வரை செய்யப்படுகின்ற காரியங்களில் அநேக ருக்குப் பங்கிருக்கிறது. இப்படிப்பட்ட ஊழியங்கள் ஊழியர்களின் திறமைக் கேற்றவாறு பிரித்துக்கொடுக்கப்பட்டு, சிலர் நற்செய்தியினை வீதிதோறும் எடுத்துரைக்கின்றவர்களாகவும், சிலர் விசுவாசிகளுக்கும், சுதேச ஊழியர்களுக்கும்

பயிற்சி அளிப்பவர்களாகவும், சிலர் ஆலயக்கட்டுமானப்பணியில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், சிலர் விசுவாசிகளின் சமூக மேம்பாட்டுக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்பவர்களாகவும் தேவப் பணியாற்றுகின்றனர். இத்துனை பிரகார மான ஊழியங்களில் ஒருமித்த கருத்தோடு ஒன்றுபட்டு பிரயாசப்பட்டதால்தான் அப்போஸ்தலர்கள் சபைகளை நிறுவி வளர்த்தெடுத்ததுபோல இப்பொழுதும் சபைகள் அதிகளவில் நிறுவப்பட்டு எல்லா நிலைகளிலும் வளர்க்கப்படுகிறது.

## 2. அற்புதங்களை நிகழ்த்துதல்:

இயேசுகிறிஸ்து பரமேறிய பிறகு மேல் அறையில் கூடி ஜெபித்து பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள், அதன் பிறகு ஜெபிப்பதை விடவேயில்லை. ஜெபிப்பதினால் வரும் வெற்றியை ருசித்த அவர்கள், தாங்களும் ஜெபித்து மற்றவர்களையும் ஜெபத்துக்கு நேராக நடத்தினர் (அப்.2:41,42). விளைவு என்ன! அப்போஸ்தலர்களின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளினால் பிணியாளிகள் சுகமடைந்தனர். அப்போஸ்தலர்கள் நடந்துபோகும்போது அவர்கள் நிழலாவது நோயாளிகள் மேல் படாதா, பிணியாளிகள் சுகமடைய மாட்டார்களா என்ற ஏக்கத்தோடு அவர்களை வீதியினில் கிடத்தியவர்கள் ஏராளம்! (அப்.5:15) அப்போஸ்தலர்களால் ஜெபத்தின் வல்லமையை அறிந்துகொண்ட விசுவாசிகள், பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது ஜெபத்தின் மூலம் அவனைச் சிறைக்கட்டுகளிலிருந்து தப்புவித்தனர் (அப்.12:5).

தற்கால ஊழியங்களிலும் அப்போஸ் தலர்கால அற்புதங்களும் குணமாக்கு தலும் நடைபெறுகிறது. அன்றைய அப்போஸ்தலர்கள் மட்டுமல்ல இன்றைய நமது மிஷனெரிகளும் மக்களின் துன்பங்களைப் பார்த்து மனதுருகின வர்களாக, மக்களுக்கு நன்மை செய்கின்ற வர்களாக ஊர்ஊராகச் செல்கின்றனர். ஆத்துமாக்களை மீட்டெடுக்கின்றனர். சபைகளில் குணப்படுவதற்கென விசேஷ ஜெப தினங்களை ஏற்படுத்தி, உபவாச ஜெபத்தோடு அந்த நாளில் ஜெபத்தில் பங்குகொள்ள வரும் புறமதத்தினர் உட்பட அனைவருக்காகவும் ஜெபிக்கின்றனர். நவீன மருத்துவ வசதிகள் நிறைந்துள்ள இக்காலத்தில், மருத்துவத்தாலும் மாந்திரீ கத்தாலும் சுகப்படுத்தமுடியாத நோய்களும் ஊழியர்தம் ஜெபத்தினால் குணமாகு கின்றன. பரி.பவுலின் ஜெபத்திலே இறந்துபோன வாலிபன் உயிரடைந்தது போல இன்றைய கால ஊழியங்களிலும் அநேக ஊர்களில் அற்புதங்கள் நடை பெற்றுள்ளது. அப்போஸ்தலர்களின் மூல மாகக் குணமடைந்த முடவன், குதித்தெழும்பி தேவனைத் துதித்து மகிமைப்படுத்தி சாட்சியாக நின்றதுபோல் (அப்.3:6-8) இன்றைய ஊழியங்களிலும் குணமடைந்த வர்கள் குடும்பமாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவர்தம் வீடுகளிலே சிறப்பு துதிக்கூட்டங்கள் ஏற்பாடு செய்து, ஊரில் வசிப்பவர்களையும் வேறு இடங் களில் வசிக்கும் அவர்தம் உறவினர் களையும் அழைத்து, எதற்காகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோம் என்று சாட்சி சொல்கின்றனர். ஜீவனுள்ள சாட்சிகள் சமுதாயத்திலே ஒரு சிறந்த தாக்கத் தினை ஏற்படுத்துகிறது. சபை வளர்ந்து பெருகுகிறது.

## 3. எதிர்ப்பின் மத்தியில் சபை வளர்ச்சியடைதல்:

ஒரு சபையானது எல்லா நிலைகளிலும் வளரும் போது நிறைய இடர்பாடுகளை எதிர்கொண்டே வருகிறது. அதிலே முக்கியமானது எதிர்ப்பு. பொதுவாக

எதிர்ப்புகள் தங்களுடைய வருமானம் பாதிக்கப்படும்போது (அப்.19:23-27). செல்வாக்கு மங்கிப்போகும்போது, அதிகாரம் மட்டுப்படுத்தப்படும்போது, ஒருசாராரைப் பிரியப்படுத்த வேண்டியதிருக்கும்போது, அதிதீவிர மதவெறிபற்றுகொள்ளும்போது வருகிறது (அப்.23:12). அப்போஸ்தலர்களின் ஊழியத்திலே இப்படிப்பட்ட தடைகளைத் தாண்டி அவர்கள் சபைகளை நிறுவி வெற்றி சிறந்தார்கள் என்று பார்க்கிறோம்.

தேவாலயத்தில் அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்த ஆசாரியர்கள், பரிசேயர்கள், சதுசேயர்களும், தேசத்திலே ஆட்சி செய்துகொண்டிருந்தவர்களும், ஜனங்கள் அப்போஸ்தலர்கள் பக்கமாக கூட்டங்கூட்ட மாகத் திரும்புவதைக் கண்டு, தங்கள் செல்வாக்கு மங்கிப்போவதினால் பரி. பேதுருவையும், பவுலையும் தீவிரமாக எதிர்த்து சிறைச்சாலையில் போடுவித்தனர்.

இன்றைய காலக்கட்டத்திலும், ஊழியத்தில் இப்படிப்பட்ட இடர்பாடுகள் வருவதைப் பார்க்கிறோம். ஜனங்களின் அறியாமை யைப் பயன்படுத்தி, அவர்களைப் பயத்திலே வைத்திருந்து, நோய்களை நீக்குகிறேன் என்ற பெயரில் அவர்களிடமிருந்து தானியங்களையும் பணத்தையும் கொள்ளையாடி, அதின் மூலம் வருமானம் சம்பாதித்த மந்திரவாதிகளே தற்போது ஜனங்கள் இலவசமாய்ச் சுகம்பெற்று இரட்சிப்படைந்து கிறிஸ்தவ விசுவாசிகள் ஆவதினால், பிற மக்களைத் தூண்டிவிட்டு எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறார்கள். எல்லா விதப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண தன்னிடம் வந்துகொண்டிருந்த ஜனங்கள், தற்போது கிறிஸ்தவர்கள் ஆனதினால் தங்கள் சபைப் போதகரிடமும், மூப்பர் களிடமும் சென்று ஆலோசனை பெற்று பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதினால், தன்னுடைய செல்வாக்கு ஊரிலே மங்கிப்போவதினால் கோபமடைகிற ஊர் தலைவரும் எதிர்ப்பு தெரிவிக்கின்றார். தேர்தல் வரும் சமயத்தில் ஒருசாராரைப் பிரியப்படுத்த அரசியல்வாதிகள் கிறிஸ்தவ ஊழியத்தை எதிர்க்கின்றனர். பஞ்சாயத்து தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப் பினருக்கான தேர்தலின்போது இப்படிப்பட்ட எதிர்ப்புகள் பலமாக எழும்புகின்றன.

எப்படி அப்போஸ்தலர்கள் காலத்திலே விசுவாசிகள் ஜெபித்து எதிர்ப்புகளை வென்றார்களோ அப்படியே இக்காலத்தி லேயும் நம் ஊழியர்களும் விசுவாசிகளும் உபவாசித்து ஜெபித்து இந்த எதிர்ப்பு களையெல்லாம் எதிர்கொள்கின்றனர். சபையானது எதிர்ப்புகளை உரமாக மாற்றிக்கொண்டு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. விசுவாசிகளுக்குச் சிம்ம சொப்பனமாகக் காணப்பட்ட பவுல் மாறினது போல, விசுவாசிகளுக்கு எதிராக நின்ற ஊர் தலைவர்கள் மற்றும் பஞ்சாயத்து தலைவர்கள் நிறைய பேர் இயேசுகிறிஸ்துவை குடும்பமாக ஏற்றுக்கொண்டு சாட்சியாக வாழ்ந்து வருகின்றனர்.

## *4. சபைகள் முறையாக வழிநடத்தப்படுதல்:*

நற்செய்தி அறிவித்து, ஜனங்களைப் பாவத்திலிருந்து மனந்திரும்ப வைத்து, கிராமங்களிலும் நகரங்களிலும் சபைகளை உருவாக்குதல் எவ்வளவு முக்கியமோ அதுபோல அந்தச் சபைகள் எல்லா சூழ்நிலைகளிலும் நிலைத்து நிற்கத் தேவையான வழிநடத்துதல் அளிப்பதும் முக்கியமே. சபைகள் எந்தவிதப் பிரச்சனை களுமின்றி வளர சாத்தான் விடமாட்டான். சபையை அழிக்க சாத்தான் கொண்டுவருகிற எல்லா அம்புகளுக்கும் சபை விசுவாசிகள் தப்பி ஆவிக்குரிய வளர்ச்சியை எட்ட ஊழியத்தில் பின்தொடர்பணி மிகவும் அவசியம். அதனை உணர்ந்த அப்போஸ் தலர்கள் தாங்கள் உருவாக்கின சபைகள் பலவிதச் சோதனைகளை ஜெயித்து எல்லா நிலைகளிலும் வளர பல காரியங்களைக் கைக்கொண்டார்கள்.

## அ) மூப்பர்கள் மற்றும் ஊழியர்களை ஏற்படுத்தினர்:

அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தின் தன்மையைக் குறித்து தெளிவாக அறிந்து வைத்ததின் நிமித்தம் அவர்கள் ஒரே இடத்திலே தங்களை முடக்கிக்கொள்ளாமல் தங்களால் இயன்ற வரை பல கிராமங்களிலே நற்செய்தி அறிவித்து சபைகளை உருவாக்கினர். தாங்கள் உருவாக்கின சபைகளுக்குத் தலைமை தாங்கி நடத்த, மூப்பர்களை ஏற்படுத்தினர். அதுமட்டுமன்றி சபைகளை ஆவிக்குரிய வழியில் நடத்த தீமோத்தேயு, தீத்து, மாற்கு, தீகிக்கு, எரஸ்து, துரோப்பீமு, பிலேமோன், அர்கிப்பு, ஒநேசிமு போன்ற எண்ணற்ற உடன் ஊழியர்களை ஏற்படுத்தி, சபைகள் ஆவியின் அனலில் குன்றாமலிருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள் (2தீமோ.4:9-20). இன்றைய நாட்களில், அப்போஸ்தலர்கள் நமக்கு வைத்துவிட்டுச் சென்ற முன்மாதிரியைப் பின்பற்றி, உருவாக்கப்படுகிற ஒவ்வொரு சபைக்கும் ஒரு மூப்பரும், கிரமமான ஆராதனை முறைமைகள் மற்றும் ஜெபக்கூடுகைகளைக் கவனிக்க இரண்டு மூன்று சபைகளுக்கு ஒரு ஊழியரும் ஏற்படுத்தப்படுகின்றனர். சபைகள் வளர்ச்சி பெறுகின்றன.

## ஆ) சபைகள் தன்னிறைவு பெறத்தக்கதாக வழிநடத்தினர்:

அப்போஸ்தலர்கள் ஏதாவது நன்மையை விசுவாசிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி ஊழியத்தில் ஈடுபடவில்லை. மாறாக அவர்களுக்குப் பாரமாக இருக்க விரும்பாமல் தங்கள் கைகளினால் வேலைசெய்து அதிலே ஜீவனம் பண்ணி, ஊழியமும் செய்தார்கள் (1தெச.2:9). சபைகள் தன்னிறைவு பெற்று துன்பப்படுகிற மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிற சபைகளுக்கு உதவி செய்யும்படி போதித்தனர் (2 கொரி.8:1-15).

நமது பணித்தளங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலாய் தன்னிறைவு உபதேசமானது நம்முடைய ஊழியர்கள் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. விளைவு, அநேக சபைகள் தங்கள் பகுதி ஊழியர்களின் தேவைகளைத் தாங்களே சந்திக்கின்றன. சில சபைகள் பிற இடங்களுக்கும் தங்கள் சபையின் சார்பாக ஊழியர்களை அனுப்பி, பொருளாலும் ஜெபத்தாலும் தாங்குகின்றன. சேகரிக்கப்படும் காணிக்கைப்பணம் அந்தந்த சபையின் நிர்வாகக்குழு மூலமாகப் பராமரிக்கப்பட்டு, முறையாக எல்லா விசுவாசிகளுக்கும் தெரியப்படுத்தப்படுகிறது. சபை காணிக்கையின் ஒரு பகுதி, அந்தப் பிராந்திய சபைகளின் கூட்டுக்குழுவுக்கு அளிக்கப்படுகிறது. கிறிஸ்துமஸ் போன்ற விழாக்களிலும், பெரிய எதிர்ப்புகள் வரும்போதும் அதனை எதிர்கொள்ள இந்தப் பணம் உபயோகிக்கப்படுகிறது. சபைகளிலே வைக்கப்படுகின்ற பணமானது சபையின் கூட்டங்களுக்கும் மற்றும் கட்டிட பராமரிப்புச் செலவுகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது.

## இ) உபதேசத்திலே சமரசம் செய்துகொள்ளாதிருந்தனர்:

சபைகள் வழிவிலகிடாமல், எல்லா நிலைகளிலும் வளரவேண்டும் என்ற குறிக்கோளோடு ஆரம்பம் முதலே சபைகளுக்கான உபதேசத்தில் எந்தவிதச் சமரசமும் செய்துகொள்ளாமல் உறுதியாக அப்போஸ்தலர்கள் இருந்தனர். ஆகவே சபையிலே பிரிவினை காணப்பட்டபோது அதை வன்மையாகக் கண்டிக்கவும் (அப்.1:10-13), விபச்சாரம் போன்ற பாவங்கள் நிகழ்ந்தபோது எச்சரிக்கை செய்யவும், பரிசுத்த ஆவியின் நிறைவைக் குறித்து குழப்பம் வந்தபோது அதனைப் பற்றிய தெளிவைக் கொடுக்கவும் (1 கொரி.14), திருமணம் போன்ற முக்கிய முடிவுகளில் அந்நியரோடு கலவாதிருக்கவும் (2 கொரி.6:14) தீர்க்கமான உபதேசங்களை விசுவாசிகளுக்குத் தந்து சபையின் அஸ்திபாரம் இயேசுகிறிஸ்துவின்மேல் இருக்குமாறு பார்த்துக்கொண்டனர் (1 கொரி.3:11-15).

இக்காலத்திலும் நமது பணித்தளங்களிலுள்ள சபைகளுக்கு இவ்விதப் போதனைகள் ஊழியர்களால் கொடுக்கப்படுகிறது. பிரிவினை ஏற்பட சந்தர்ப்பம் உண்டானால், சபைகளின் மண்டலக் கூடுகையில் மூப்பர்கள் மற்றும் ஊழியர்களால் சமாதானம் ஏற்பட வழிவகை செய்யப்படுகிறது. சபைகளை அதிகம் கெடுக்கின்ற குடி, விபச்சாரம் போன்ற பாவங்களை அறவே விலக்கி வைக்கும்படியாக வாலிபர் கூட்டங்கள் நடத்தப்பட்டு அறிவுரை வழங்கப்படுகிறது. குடித்துவிட்டு வருகின்றவர்களை சபைக்குள் அனுமதிப்பதேயில்லை. வாலிப ஆண்களும் பெண்களும் சந்திக்கின்ற அடுத்த மிக முக்கியமான பிரச்சனை-திருமணம். பொதுவாக வட இந்தியாவில் வாலிபர்கள் தன்னிச்சையாக முடிவெடுப்பதினால் திருமணத்திற்கென்று அவர்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் வாலிபர்களுக்கென நடத்தப்படும் கூட்டங்களில் திருமணத்திற்கென்று விசேஷித்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஆகவே நமது விசுவாசிகளின் பிள்ளைகளுடைய திருமணங்கள் குடும்பத்தார் மூலமாகவே நிச்சயிக்கப்படுகின்றன. இதையும் மீறி அவிசுவாசிகளை மணம் முடித்து வரும் வாலிபர்களின் புது வாழ்க்கை துணைகளை விசுவாசிகளாக்கி, அவர்களை ஆலய உறுப்பினர்களுமாக்குகின்றனர். இவ்வாறாக ஊழியம் செய்து, தங்கள் இன்னுயிரையும் கொடுத்து சபைகளை உருவாக்கிய அப்போஸ்தலர்களை முன்மாதிரியாகக் கொண்டு இக்கால ஊழியர்களும் சபைகளும் நடைபோடும் என்றால், ஆதியிலே சபைகளிலே உண்டான நல்ல தாக்கமும் எழுப்புதலும், அதனால் சமூகத்திலே ஏற்பட்ட மாபெரும் மனமாறுதலும் இன்றைக்கும் நம் மத்தியில் நடைபெறுவது சாத்தியம் அன்றோ!


**அருட்திரு. டி. ஆபிரகாம்,**
மனிதவள மேம்பாட்டுத்துறை செயலர்,
தலைமைச் செயலகம்.


## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. D. சிரில் ஆஸ்டின் ராஜ் அவர்கள், 2007-ல் இருந்து திருவேற்காடு பகுதியில் கௌரவ முன்னேற்றப்பணியாளராகவும், சில வருடங்கள் திருவேற்காடு வானகரம், மதுரவாயில் பகுதியில் முன்னேற்றப்பணியாளராகவும் பொறுப்பேற்று, கர்த்தருக்குப் பயந்து மிகவும் துடிப்போடும் மனமகிழ்ச்சியோடும் ஜெபக்குழுக்களை நடத்தி உற்சாகமாகச் சேவை செய்து வந்தார்கள். சுகவீனத்தினிமித்தம் இவர் கடந்த 11.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் - டேரில்ராஜ், ரீனுவை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

## ஜெபத்தினால் மாறிய சாபம்!

உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள தினேஷ்பூர் பணித்தளம். கான்பூர் கிராமத்தில் வசிக்கும் நமது பெண் விசுவாசி பூஜாவின் வாழ்க்கையில் தொடர்ந்து மூன்று குழந்தைகள் பிறந்து மரித்ததினிமித்தம், அவர் உள்ளம் உடைப்பட்டவராய் முழுவதும் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் மிகவும் கவலையுடன் காணப்பட்டார். ஆயினும் அவர் மறுபடியும் கருத்தரித்தபோது குழந்தையின் சுகமான பிரசவத்திற்காக அனைத்து விசுவாசிகளுடன் இணைந்து கண்ணீரோடே ஜெபித்தார் தேவன் அவருடைய கண்ணீரைக் கண்டு, ஆரோக்கியமான ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க ஆசீர்வதித்தார். அவருடைய வாழ்க்கையில் அற்புதம் செய்த தேவனுக்கு மிகவும் நன்றியுள்ளவராய்க் காணப்படுகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



# திருச்சபை மற்றும் மிஷனெரிப்பிரதிஷ்டை!

குஜராத் மாநில கெர்காம் தாலுகாவைச் சார்ந்த பிட்டா கிராமத்திருச்சபையினரின் முகங்கள் யாவும் கோலாகலமான திருவிழா மனநிலையுடன் மலர்ந் திருந்தன. காரணம், கடந்த 25 வருடங்களாக இம்மக்கள் தங்களது கிராமத்தில் ஆலயம் கட்டப்பட வேண்டுமென ஒருமனதோடு பிரார்த்தித்து வந்தனர். இதற்கோர் பிரகாச மானப்பதில் என்பாற்போல் கடந்த 2021 மார்ச் 8-ம் தேதி தேவநாம மகிமைக்கென பிட்டா கிராமத்தில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டது.

திருச்சி - தஞ்சாவூர் பேராய பிஷப் மாமறைதிரு. டாக்டர். D. சந்திரசேகரன் அவர்களும், அப்பேராயத்தின் எழுத்தர் செயலாளரான அருட்திரு. S. சுதர்சன் அவர்களும், நமது திருச்சி FMPB ஸ்கேன் குழுத்தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களும் காலை 9:30 மணிக்கு பிட்டா கிராமத்திற்கு வருகை தந்தனர். அவர்களைக் குஜராத் மாநில கலாச்சார முறைப்படி நடனமாடியும், மலர்களைத் தூவியும் பிட்டா திருச்சபை மக்கள் இனிதே வாழ்த்தி வரவேற்றனர். திருச்சி ஸ்கேன் ஊழியப்பிரிவினரால் கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கல்வெட்டைப் பாஸ்டர். ஆல்பர்ட் மகாராஜா அவர்கள் திறக்க, பிஷப் அவர்கள் ஜெபத்துடன் இவ்வாலயத்தைத் திறந்து வைத்தார்கள். இவ்வாலயப்பிரதிஷ்டை ஆராதனையின் ஆரம்ப ஜெபத்தைப் பிட்டா திருச்சபைப்போதகர் அருள்திரு. மகேந்திரபாய் ஏறெடுக்க, தேவசெய்தி பிஷப் அவர்களால் அருளப்பட்டது. பின்னர் பிட்டா திருச்சபை மக்களின் மனவிருப்பப்படி, மத்தியப்பிரதேசம், மத்வாட் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி சகோ. மங்கோல் கிஸ்கு, பிஷப் அவர்களால் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டார். அதன்பின் ஐக்கியப்பந்தியுடன் பிரதிஷ்டை ஆராதனை நிறைவு பெற்றது.



இம்மாபெரும் தருணத்தில் இத்திருச்சபை மக்கள், 1980-ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நமது மிஷனெரிகளின் மூலம் இப்பகுதிகளில் சுவிசேஷம் பரவிய அந்நாட்களில் அதிகமான எதிர்ப்புகள் காணப்பட்டபோது, நமது மிஷனெரிகள் பல அடி உதைகளுக்கு ஆளாகியதையும், அந்த உபத்திரவத்தின் மத்தியில் ஒரு சில குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுத் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க தேவன் கிருபை செய்ததையும் நினைவுகூர்ந்தனர். சிறிய மனை ஒன்றில் முதலாவது தேவனை ஆராதிக்கத் தொடங்கிய இவர்களுக்கு இன்று தேவன் ஈந்துள்ள அழகிய திருச்சபைக்காகவும் தேவனுக்கு நன்றி பாராட்டினர்.



நமது இயக்கத்திருச்சபைகள் - குஜராத் மாநிலத்திருச்சபைகளுக்குச் சிறந்த முன்மாதிரியாக இருப்பதோடு, **'ஜெபிக்கும் ஓர் திருச்சபை,' சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத மக்களைச் சந்திக்கும் தரிசனத்தை மட்டும் பெறாமல், அதற்கென பிரத்தியட்சமாக மிஷனெரிகளைத் தாமே அனுப்பிக்கொடுக்கும் திருச்சபையாகவும் திகழும்** என்பதற்கு ஒரு நல்ல நிரூபணமாக இத்திருச்சபையை உருவாக்கியுமிருக்கிறது என்றால் மிகையாகாது. ஆம், சுவிசேஷ வெற்றியின் அடையாளமாக இந்தப் பிட்டா திருச்சபை அக்கிராமத்தில் இன்று நிமிர்ந்து நிற்கின்றது. தேவனுக்கே மகிமை!

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



சகோ. P.D. பெனடிக்ட் ராஜா (11.10.1962 - 29.07.2021) அவர்கள் கேரளா மாநிலத்திலுள்ள கொல்லம் பகுதியை மையமாக வைத்து நமது ஊழியத்திற்கு ஒரு தூணாக செயல்பட்டு வந்தார். அவர் தூத்துக்குடியில் பிறந்து, சாயர்புரத்தில் வளர்ந்தாலும், தேவன் அவரைக் கொல்லத்திற்கு அழைத்துச் சென்று ஆசீர்வதித்து, அநேகருக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்காலாகப் பயன்படுத்தினார். கட்டுமான பொறியாளரான அவர் சி.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்ற கட்டுமான நிறுவனத்தை கொல்லத்தில் நிறுவி, நமது ஊழியத்திற்கு பெரும்பங்களிப்பை நல்கி வந்தார். கொல்லத்திலுள்ள தமிழ் மக்களைக் கூட்டி, தனது மனைவி திருமதி. பியூலா சிந்தியா பெனிடிக்ட் அவர்களின் நினைவாக புனித CSI ஸ்தேவான் திருச்சபையை உருவாக்கினார். தேவன் அவருடைய தலைமைத்துவத்தை விரிவாக்கி, கொல்லம் கொட்டரக்கரா பேராயத்தின் பொருளாளராக உயர்த்தினார். அவருடைய மிஷனெரிப்பணி வாஞ்சை அவரை அநேக மிஷனெரிகளை தாங்குவதற்கும், அநேகரை இப்பணியில் ஈடுபடுத்துவதற்கும் வழிநடத்தியது. அவரது மகன் சகோ. பென்ஹர் காட்சன் அவர்களை நமது ஜெபத்தினால் தாங்குவோம்.



திரு. P. சுந்தர்ராஜ் அண்ணன், கன்னியாகுமரி சாந்தபுரம் பணி மாவட்டம் அம்மாண்டி விளை பகுதியில் சுமார் 20 ஆண்டுகளாக ஜெபக்குழுத்தலைவராக சிறப்பாக செயல்பட்டு வந்தார்கள். தனக்கு கிடைத்த நேரங்களையெல்லாம் சுவிசேஷ பணியின் சேவைக்காக வீடுவீடாகச் சென்று காணிக்கைகளை சேகரித்து முறையே அனுப்பி வந்தார்கள். ஜெபக்குழுக்களை உருவாக்குவதிலும், நடத்துவதிலும் பல் வேறு கூடுகைகளில் பங்கெடுப்பதிலும் வாஞ்சையோடு தன் பங்களிப்பை கொடுத்தவர்கள். அன்னார் கடந்த 09.07.2021 அன்று இறை அழைப்பைப் பெற்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். அண்ணனின் பிரிவால் வருந்தும் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



ஆசிரியை விக்டோரியா பால்ராஜ் அவர்கள், 1928-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் தேதி சாயர்புரத்தில் நீதியரசர் திரு. பால்ராஜ் மற்றும் திருமதி. நல்லம்மாள் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவர்கள் ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் சிறந்த ஆசிரியையாக 30 ஆண்டுகள் பணி செய்து, 1987-ம் ஆண்டு பணிஓய்வு பெற்ற பின், ஈரோடு ஆசிரியர் குடியிருப்பில் உள்ள தனது சொந்த வீட்டில் குடியிருந்தார்கள். மற்ற சக ஆசிரியைகளான சாந்தி, ஹில்டா, ஆனந்தாயி, மங்களவதி ஆகியவர்களுடன் இணைந்து பாரத்தோடு ஜெபித்து வந்தார்கள். 2020 டிசம்பர் மாதம் மிகுந்த விலைமதிப்புள்ள தனது வீட்டை FMPB ஊழியத்திற்கென்று தானமாக எழுதிக்கொடுத்தார்கள். இவர்கள் கடந்த 2021 மே 27-ம் தேதியன்று இரவு தனது 94-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். ஆசிரியை விக்டோரியா பால்ராஜ் அவர்களின் சிறந்த வாழ்வு மற்றும் தியாகத்திற்காக ஆண்டவரைப் போற்றுகிறோம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



பெத்தேல் வேலூர் ஜெபக்குழுத்தலைவியும், காலஞ்சென்ற பாசத்திற்குரிய திரு. தனசிங் (ஓய்வுபெற்ற காவல்துறை ஆய்வாளர் மற்றும் நமது வேலூர் பணிமாவட்டத்தில் நமது இயக்கத்தின் ஆரம்பப்பணிக்கு வித்திட்ட வர்களில் மிக முக்கியமானவர்) அவர்களின் மனைவியுமான திருமதி. விமலா தனசிங் அவர்கள், கடந்த 05.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். இவர் தனது கணவர் விட்டுச்சென்ற ஜெபக்குழுத் தலைமை பொறுப்பினைக் கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வந்தார். இவர்களுக்காகக் கர்த்தரைத் துதிக்கிறோம். இவர்களின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தர்தாமே இக்குடும்பத்தினரை ஆறுதல்படுத்துவாராக!



ஆசிரியர் பணி செய்து ஓய்வு பெற்ற சகோ. சுந்தர்ராஜ் அவர்கள், அன்பின் நகரம்-தூத்துக்குடி தெற்குப் பிராந்தியத்தில் கடந்த 57 ஆண்டுகளாய் நமது ஊழியத்திற்காக ஜெபித்தும் காணிக்கை சேகரித்தும் வந்தார்கள். இவர் கடந்த 16.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி திருமதி. செல்லதாய் சுந்தர்ராஜ் மற்றும் மகன்களான சகோ. குணசீலன் குடும்பம், சகோ. ஜெயசீலன் குடும்பம், மகள் சகோதரி. விஜயராணி குணசேகர் குடும்பம் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கும் தேவன்தாமே ஆறுதலையும், சமாதானத்தையும் கட்டளையிட ஜெபிப்போம்.



சேலம் மாவட்டத்தைச் சார்ந்த ஓய்வு பெற்ற தலைமையாசிரியையாகிய திருமதி. சந்திர லீலா தேவதாஸ் அவர்கள், கடந்த 17.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் நமது ஊழியத்தில் ஜெபித்தும், நிதியுதவி செய்தும், நமது ஊழியர்களைத் தங்களது வீட்டில் அன்புடன் உபசரித்தும், உற்சாகப்படுத்தியும் பலவிதங்களில் செயல்பட்டு வந்தவர். இவரது மறைவால் வாடும் இவரது கணவர் மற்றும் குடும்ப அங்கத்தினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.




கருங்கல் பணி மாவட்டம், மாங்கரை பகுதி ஜெபக்குழுத்தலைவராகப் பணியாற்றிய ஓய்வு பெற்ற தலைமையாசிரியராகிய திரு. J. இராபர்ட் சிசில் அவர்கள், கடந்த 07.07.2021 அன்று தனது 81-வது வயதில் இறையழைப்பைப் பெற்று நித்திய பேரின்ப வாழ்விற்குள் பிரவேசித்துள்ளார்கள். இவர் தனது குடும்பத்தின் சார்பாக இரண்டு மிஷனெரிகளையும் ஒரு குழந்தையையும் தாங்கி வந்ததோடு, குஜராத்தில் ஓர் அழகான ஆலயத்தையும் கட்டிக்கொடுத்துள்ளார்கள். இவரது மூன்று மகன்கள், மருமக்கள், அன்பு பேரப்பிள்ளைகளை தேவன் ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த ஜெபிப்போம்.



திரு. மகாராஜன் அவர்கள், கடந்த 40 ஆண்டுகளாக FMPB ஊழியத்தில் இணைந்து ஜெபம், காணிக்கை சேகரித்தல் மற்றும் பல ஊழியச் செயல்பாடுகளில் உற்சாகமான ஈடுபாடு காட்டி வந்தார். இவர் தனது 78-வது வயதில் உடல் பெலவீனத்தினிமித்தம் மருத்துவ சிகிட்சை பலனின்றி, 23.07.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி, இரண்டு மகன்கள், ஒரு மகள் குடும்பங்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் யாவரையும் தேவன் தாமே ஆறுதல்படுத்தி பெலப்படுத்த ஜெபிப்போம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள் திருவள்ளூர் மாவட்டம்

| வ.எண். | இறந்தவரின் விவரங்கள் | இறந்த தேதி | இடம் | புகைப்படம் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ஜாண் தேவசகாயம் (வயது 84) ஊழியர் | 21.04.2021 | காந்தி நகர் |  |
| 2. | திரு. சாமுவேல் (வயது 90) ஜெபக்குழுத்தலைவர் | 24.04.2021 | காந்தி நகர் |  |
| 3. | திருமதி. ராணி திலகம் (வயது 71) ஜெபக்குழுத்தலைவி | 11.05.2021 | தண்டுரை |  |
| 4. | திரு. தேவ சுதன் (வயது 55) ஜெபப்பங்காளர் | 11.05.2021 | காந்தி நகர் |  |
| 5. | திரு. வசந்தர் மேன்யல் (வயது 58) ஸ்கேன் தலைவர் – இசைக்கருவி வாசிப்பவர் | 14.05.2021 | சத்திரம் |  |
| 6. | திருமதி. ஜெயா ஜார்ஜ் (வயது 64) பெண்கள் பிரிவு ஜெபக்குழுத்தலைவி | 20.05.2021 | காந்தி நகர் |  |
| 7. | திரு. D.G.S. தனசிங் (வயது 55) ஸ்கேன் தலைவர் / கௌரவ விரிவுப்பணி செயலாளர் | 21.05.2021 | பாபு நகர் |  |
| 8. | திருமதி. வெனன்சியா (வயது 38) இளைஞர் பிரிவுத் தலைவி (பட்டாபிராம் அலுவலகத்தில் பணிபுரிந்தவர்) | 24.05.2021 | காந்தி நகர் |  |

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**சகோ.**
**நிஜம் முசாஹரி**
(1985 - 2021)

சகோ. நிஜம் முசாஹரி, அஸோம் மாநிலத்தி லுள்ள துலூத்பாரா எனும் சிறிய கிராமத்திலே கிறிஸ்துவை அறியாத திரு. சினுத் முசாஹரி & திருமதி. நோனி பாலா என்ற தம்பதியருக்கு மகனாக 15.08.1985-ல் பிறந்தார். இத்தம்பதியர் தங்களது குமாரத்திகளில் ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கும்போது, ஒரு கிறிஸ்தவ நண்பரின் ஜெபம் மூலம் அவருக்குச் சுகம் கிடைக்கப்பெற்றதினால், இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, குடும்பமாக வட இவாஞ்சலிக்கல் லூத்தரன் திருச்சபையில் இணைந்தனர்.

சகோ. நிஜம் முசாஹரி, தனது 18-வது வயதில் 07.03.2003-ல் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார். அதன்பின் அநுதினமும் வேதாகமம் வாசித்து, கிறிஸ்துவில் வளரத் தொடங்கினார். இவர்களது திருச்சபையில் நடைபெறும் சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கான ஊழியங்களிலும் திருச் சபை கூட்டங்களிலும் மிஷனெரி கூட்டங்களிலும் இவர் பங்கேற்றதினால், அழியும் ஆத்துமாக்களைக் குறித்ததான பாரம் இவருக்குள் நிரம்பியது. கர்த்தர் இவரை மத்தேயு 28:18-19-ம் வசனங்களின் வாயிலாக ஊழியத்திற்கென அழைத்தார். எனவே, இவர் தனது எதிர்கால ஊழியத்திற்காகத் தன்னை மேம்படுத்திக் கொள்ள, பெங்களூரிலுள்ள தென்னிந்திய வேதாகம கல்லூரியில் (SIBC) இணைந்து, B.Th., பட்டப்படிப்பை 2010-ல் முடித்தார். பின்பு சகோ. நிஜம் முசாஹரி நமது FMPB இயக்கத்தில் இணைந்து தனது ஒருவருட மிஷனெரிப் பயிற்சியை உத்தரப்பிரதேசத்தி லுள்ள ஜான்சி NIM-ல் முடித்து, பஞ்சாபில் ஊழியராகப் பணியமர்த்தப்பட்டு, புத்லாடா பணித்தள ஊழியத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

இவர் 2013-ம் ஆண்டில் நமது ஜீப்குழு ஊழியத்தினரோடு இணைந்து கிராமம் கிராமமாகச் சென்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பறைசாற்றி வந்தார். தேவசித்தப்படி 20.05.2014-ல் இவர், சகோதரி. சரோஜினி நர்சாரியைத் திருமணம் செய்து கொண்டு, பாகபூரணா பணித்தளத்தில் தங்கி, பஞ்சாபி மொழியை நன்குக் கற்றறிந்து, சுவிசேஷத்தைக் கேட்டிராத மக்கள் மத்தியில் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார். இவர் ஹிந்தி மொழியையும் நன்கு தெரிந்திருந்தார். 2015-ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து நிகல் சிங்வாலா பணித்தளத்திலும், 2020-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஃபாசில்கா பணித்தளத்திலும் சிறப்பாகத் தங்களது ஊழியப்பணிகளைச் செய்து நிறைவேற்றினர். நிகல் சிங்வாலா பணித்தளத்தில் இவர் பணியாற்றும்போது ஓர் அழகிய திருச் சபையை உருவாக்கி, அதிலுள்ள விசுவாசிகளைக் கிறிஸ்துவுக்குள் அதிகம் பெலப்படுத்தினார். பின்பு அந்த விசுவாசிகளின் உதவியைக் கொண்டே, ஆலயத்தைச் சுற்றிலும் கூடுதல் நிலம் வாங்கி, அதற்கு வளாகச் சுற்றுச்சுவரையும் பாதுகாப்பாகக் கட்டி முடித்தார். கர்த்தர் இவருக்குக் கொடுத்திருந்த நன்குப் பாடும் திறனையும், இசை மீட்டும் (guitar) திறனையும் இவர் தேவநாம மகிமைக்கென்றும், திருச்சபையினரின் ஆவிக்குரிய நலனுக்கென்றும் மிக நேர்த்தியாகப் பயன்படுத்தி வந்தார்.

வேகமாகப் பரவிவந்த கோவிட்-19 தொற்று நோய் சகோ. நிஜம் முசாஹரியையும் தாக்கிய ஒரே வாரத்தில் இவர் தனது நுரையீரலின் பாதிப்பு அதிகரித்ததினால், மூச்சுவிட இயலாமல் தவித்தார். எனவே, அவசர சிகிட்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சிலநாட்கள் சிகிட்சை பெற்றார். ஆயினும் இவரது பிராண வாயுவின் அளவு குறைந்துக்கொண்டே சென்றதால் சிகிட்சை பலனின்றி, 14.07.2021-ல் இவ்வுலக ஓட்டத்தை முடித்து, தேவ இராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். இவரது சரீரம் ஃபரித்கோட்டில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடனும் நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் கண்ணீர் சாட்சியுடனும் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் சிறிது காலமே ஊழியம் செய்தாலும், தேவநாமம் மகிமைப்படும்படி அதை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார். தேவனும் இவரை இவரது 36-ம் வயதிலேயே தமது பரலோக வீட்டிற்குச் சீக்கிரமாய் அழைத்துக் கொண்டார். இவரை இழந்து தவிக்கும் இவரது அன்பு மனைவி திருமதி. சரோஜினி முசாஹரியை நமது ஜெபத்தில் தாங்கிக் கொள்வோம். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவாகிய நமது குடும்பம், மற்றுமொரு செயல்வீரரை இழந் திருப்பது நமக்கு மிகுந்த வேதனையளிப்பதாகவே இருக்கின்றது.

## 1 செப்டம்பர்

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வின்சென்ட் பிரேம்ராஜ்

## ஜம்மு

### நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** புதிதாக இரண்டு நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை நுகர ஆரம்பித்துள்ளனர். புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. 10 நபர்கள் புதிய ஏற்பாட்டை உற்சாகமாகப் பெற்றுச் சென்றனர். ஏர்மா கிராமத்திலுள்ள ராணி தேவியைப் பிசாசின் பிடியிலிருந்தும், அபிஷேக் குமாரைப் போதை பழக்கத்திலிருந்தும் தேவன் விடுவித்தார். பதியோரி கிராமத்தைச் சேர்ந்த பின்னா தேவியை நெஞ்சு வலியிலிருந்தும், சுவாச பிரச்சனையிலிருந்தும் விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக ஆர்வத்துடன் சுவிசேஷத்தைக் கேட்கும் வசந்த்பூர், கூரா, நோனல், கேடல், ஜநோடா மற்றும் பரமாபூர் கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளான பாண்டி மற்றும் ராகுலுக்கு வனத்துறை இலாகாவில் வேலை கிடைக்க; பதியோரிலுள்ள பின்வாங்கிப்போன நமது விசுவாசி கர்தார் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்று மனந்திரும்ப; நமது ஊழியத்தைப் பற்றி தவறான வதந்திகளைப் பரப்பும் நகரியிலுள்ள மினு மனந்திரும்ப; மூடப்பழக்கவழக்கம் மற்றும் போதைக்கு அடிமையாகியிருக்கும் மாஷா இன மக்கள் கட்டவிழ்க்கப்பட; நகரி கிராமத்தில் இரண்டு இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட; நமது ஊழியத்தைக் குறித்து எதிர்மறையான தாக்கத்தை உருவாக்கும் உள்ளூர் போதகரின் மனந்திரும்புதலுக்காக ஜெபிப்போம்.

### ஜம்மு பிராந்தியம்: வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** சஷிபால் மற்றும் மகேந்திர குமார் தங்களது நிலங்களைப் பஷோலி பணித்தளத்தில் ஆலயம் கட்டுவதற்கென்று மனமுவந்து கொடுத்துள்ளனர். ராம்கார், நௌஷேரா, பஷோலி மற்றும் உதம்பூர் பணித்தளங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் 179 பிள்ளைகள் கலந்துகொண்டு தேவாசீர்வாதத்தைப் பெற்றனர். காதர்பூர் கிராமத்தில் இரண்டு குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றனர். கந்த்ரால் கிராமத்தில் நடைபெற்ற சத்சங் கூடுகையில் அநேகர் முதன்முறையாகக் கலந்துகொண்டு இயேசுகிறிஸ்துவின் அன்பை ருசித்தனர். நரோத், ராம்கார் ஆகிய இடங்களில் ஊழியம் ஆரம்பிக்க தேவன் உதவினார். மஹாசா மற்றும் பட்வால் சமுதாயத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகத் திட்டமிட்டிருக்கிற படோடு, ராம்பன், தோடா, கிஷ்துவார், படர்வா மற்றும் பாடர் பகுதிகளில் சுவிசேஷத்தைத் திறம்பட அறிவிக்க; ஆர். எஸ். புராவில் தேவனை ஆராதிக்க ஒரு நல்ல இடம் கிடைக்க; நமது விசுவாசிகளான ரேகா, ஜெனியா ஆகியோருக்கு எதிராக இருக்கும் பொய் குற்றச்சாட்டுகளுக்கு நீதிமன்றத்திலிருந்து நீதி கிடைக்க; நமது தன்னார்வ ஊழியர் ரோமி குமார், விகாஸ் மங்கோத்ரா குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; கந்த்ரால் கிராமத்திலுள்ள ப்ரீகுமாரி தலையிலுள்ள கட்டி மறைய; நமது விசுவாசி மகேஷ் வீட்டின் கட்டுமானப்பணி தடையில்லாமல் கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.

## 2 செப்டம்பர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அஞ்சனா மஸிஹ் சத்ய பிரகாஷ்
செல்வி. சின்ஸியன்முவான்

# ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். நமது திருச்சபை களில் ஜெபக்கூடுகைகள், ஞாயிறு ஆராதனைகள், வேதாகம வகுப்பு கூடுகைகள், மற்றும் சிறிய ஜெபக் குழுக்கள் அனைத்தும் நடத்த தேவன் கிருபை செய்தார். நமது தன்னார்வ ஊழியர் பிரகாஷ் & அனு குடும்பத்தில் 3 முறை விஷப்பாம்பு வந்தபோதும் அவர்களைத் தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். சந்தோஷ் தயோவின் வீட்டில் நடந்த ஜெபக்கூட்டத்தின்போது அவரது மனைவியையும் மகள் சுரஜையும் அலைக்கழித்துக்கொண்டிருந்த பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் அனைவரும் தங்களது விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; பகான் பகுதியில் புதிதாக ஆராதனை மையம் துவங்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான மன் பகதூர், சாங்கிராம், ஷீது, ரமேஷ், பவன் மற்றும் ஷாஹிராம் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; லால்சா, தன்சா, நிர்மந்த், கௌரா மஸ்னு, சர்பாரா, டெலாத் ஆகிய பகுதிகளில் சுவிசேஷத்திற்கான புதிய வாசல்கள் திறக்கப்பட; இடுப்பு எலும்பு முறிவிலிருந்து பத்ராஸ் திருச்சபை பொருளாளர் பரிபூரண சுகமடைய; டக்லச் கிராம விசுவாசியான ரோஷன்லால் அக்கம்பக்கத்தினர் மத்தியில் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; நமது சுதேச ஊழியர் கும்ப்தாஸ் ஊழியங்களில் உற்சாகமாக ஈடுபட ஜெபிப்போம்.

### ரோஹ்ரு:
### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** புதிதாக 11 நபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர், புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரயாணம் செய்யும்போது ஏற்பட்ட பெரிய விபத்திலிருந்து தேவன் நமது விசுவாசி ரமேஷ் குடும்பத்தினரைப் பாதுகாத்தார். நமது சுதேச ஊழியர் பிரபாவின் மனைவிக்கு வந்த கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து தேவன் அவரைப் பாதுகாத்து ஜீவனைத் தந்தார். இயற்கை சீற்றத்தினால் உண்டான நிலச்சரிவினின்றும் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினின்றும் விசுவாசிகளின், குடும்பங்களை தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12-ம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகள் எதிர்பார்த்திருக்கும் உயர் கல்விக்கான கல்லூரிகளில் விரும்பின பாடங்களில் இடங்கள் கிடைக்க; நமது சுதேச ஊழியர் ஹீராவின் மனைவியைக் கர்ப்பப்பை நோய்த்தொற்றிலிருந்தும்; நமது தன்னார்வ ஊழியர் ஷெர்சிங்கைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், கரீஷ்மாவை இருதயத்தில் காணப்படும் பெலவீனங்களிலிருந்தும், மம்தாவை நீண்ட நாட்களாக இருக்கும் முதுகு வலியிலிருந்தும் தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

## 3 செப்டம்பர்
### வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஏகலைவன் K.
திருமதி. சிங் கோயி கிம் கின் சாவ்ம்

## பஞ்சாப்

### பர்னாலா:

### கிருபா ரக்ஷனா பரே & ஷகினா

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. கொட்டுடுனா கிராம நமது விசுவாசி லவ்ப்ரீத் சிங் தன் தந்தையை இழந்த போதிலும், வாழ்வாதாரத்தின் தேவைகளைச் சந்திக்க வங்கியில் வேலைவாய்ப்பு கிடைக்க தேவன் உதவி செய்தார். கிரண் கௌரை தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுவித்தார். தபா கிராமத்தைச் சேர்ந்த மன்தீப்பிற்குச் சாத்தானால் வந்த இருசக்கர வாகன விபத்திலிருந்து அவரது ஜீவனைப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபா கிராமத்தின் வெளிப்புற சந்திப்பு குழுவினர்களாகிய நீலம், மஞ்சு, ரீனா, மோனா, ரீத்து, கிரான, தனுலா கிராமத்தின் பூனம், ஜஷ்பால் கௌர், பரம்ஜீத் கௌர், மன்பிரீத், தரணி ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; அஹ்பால்கலன், கரெடி, காரேடா, ஜாங்கியானா, குணாஸ், ஜியோண்ட், ருடியாகலன் மற்றும் குடி பிண்டி ஆகிய கிராமங்களில் திருப்புமுனை உருவாக; ஷைனா மற்றும் திக்ரிவாலா பகுதிகளில் துணை மையங்கள் மீண்டும் துவங்கப்பட; தபா திருச்சபையில் தவறான போதனை மூலம் விசுவாசிகளை திசைதிருப்பும் விமலா, உஷாராணி ஆகியோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## பிசாசின் கட்டு தகர்ந்தது; மனநோய் தெளிந்தது!

*ராஜஸ்தான் மாநிலம், கோ்வாடா பணித்தளத்திலுள்ள பருத்தி கிராமத்தைச் சேர்ந்த அருணா என்கிற 16 வயது பெண்பிள்ளை, அசுத்த ஆவி மற்றும் மனநோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் கிராமங்களில் சுற்றித்திரிந்து, எல்லா விதமான பிரச்சனைகளையும் உருவாக்கிக் கொண்டிருந்தாள். அவளது பெற்றோரும் மற்றோரும் அவளைக் கட்டுக்குள் வைக்க முடியாமல் மிகவும் தவித்துக் கொண்டிருந்தனர். மருத்துவர்களிடத்திலும் மந்திரவாதிகளிடத்திலும் அழைத்துக்கொண்டு போனபோது, ஒருவராலும் அவளைக் குணமாக்க இயலவில்லை. எல்லா முயற்சிகளும் வீணான சூழ்நிலையில் கடைசியாக கென்பாவிலுள்ள நமது ஆலயத்திற்கு அவளை ஜெபத்திற்காக அழைத்துக் கொண்டு வந்தனர். விசுவாசிகள் கண்ணீரோடும், பாரத்தோடும் ஜெபித்த ஜெபத்தை தேவன் கேட்டு, அவளைத் தொட்டார். உடனே அவள் புத்தி தெளிந்தவளானாள். இதன் விளைவு அருணாவும் அவளது பெற்றோரும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டு, சந்தோஷமாக இயேசுவைத் தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டனர். பிசாசு பிடித்தவளாய், மனநோயோடு அருணாவைப் பார்த்த அனைவரும் இயேசு அவளுடைய வாழ்க்கையை மாற்றி புது வாழ்வைக் கொடுத்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். இவள் மூலம் அக்கிராமத்திலுள்ள அநேகருக்கு தேவன் இயேசுவின் அன்பை அறியப்பண்ணினார். அல்லேலூயா!*

# 4 செப்டம்பர்
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மலங்மெய் சனாலுங் டிட்டுங்பெள

## ஜைத்தோ: சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் இயேசுவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். ஜல் கௌர், ஜோதி கௌர், அமன்தீப் கௌர், குல்விந்தர் கௌர் மற்றும் மன்தீப் கௌர் ஆகியோரைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் சுகமாக்கினார். ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை களில் பசகானா ஆலயத்தில் நடக்கும் சுகமளிக்கும் ஆராதனையில் அநேகர் கலந்துகொண்டு சுகம் பெறுவதினால் பல புதிய தொடர்பாளர்கள் கிடைக்க தேவன் கிருபை செய்கிறார். பசகானாவைச் சேர்ந்த இந்தர்ஜீத் கௌரின் கர்ப்பப்பையிலிருந்த கட்டியை தேவன் சுகமாக்கினார். 15 ஆண்டுகளாகக் கட்டப்பட்டிருந்த குடிப் பழக்கம் மற்றும் போதை பழக்கத்திலிருந்து தர்மீந்தர் சிங் மற்றும் பரம்ஜீத் சிங்கை தேவன் விடுதலையாக்கினார். பின்மாற்ற மடைந்திருந்த நமது விசுவாசி சஞ்சயா மீண்டும் விசுவாசத்திற்குள் வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மத்தா, ஹரினோ, நியமிவாலா, ரோடிக்கேபுரா, தெலியவாலி, டப்டிகன்னா, வான்டர், ஜகத்வாலா, கோனியானாகுர்த், கசம்பட்டி, ஸ்ரவா ஆகிய கிராமங்களில் அநேக முறை சுவிசேஷம் அறிவிக்கப் பட்டாலும், கடினமாக இருக்கும் இம்மக்களின் இரட்சிப்பிற்காக; எலும்புகளில் காணப்படும் காசநோயிலிருந்து கிருஷ்ணன் சிங் குண மாகவும் அதன் மூலம் மத்தா கிராமம் முழுவதும் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து இரட்சிக்கப்படவும்; ஜங்பஹதூர், சோனு, தீரஜ் மற்றும் டிம்பிள் ஆகியோரது குடும்பங்கள் விசுவாசத்தின் மீது வாஞ்சை யாயிருப்பதற்குத் தடையாகக் காணப்படும் சத்துருவின் கிரியைகள் அழிக்கப்பட; குர்தீப் சிங் மற்றும் தீரஜ் குமார் குடும்பங்களில் சமாதானம் நிலவ; ஹரினோ மற்றும் வான்டர் கிராமங்களில் துவங்கப்பட்ட வேதபாட வகுப்புகளில் அநேகர் வந்து கலந்துகொள்ள; விசுவாசத்தை விட்டு பின் வாங்கிப்போன அம்பேத்கர் நகர் மற்றும் கோனியானாகுர்த் கிராம விசுவாசிகள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## மோகா:

### ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கி யுள்ளனர். புதிய விசுவாசியான அன்மோல் சிங் விசுவாசத்தினாலே தன்னுடைய எல்லாக் கடன்களையும் அடைக்க தேவன் உதவி செய்தார். கருவுற்றிருக்கும் ரூபி கௌர் கீழே விழுந்த நேரத்தில் தேவன் அற்புதமாக பாதுகாத்தார். பல்ஜீத் கௌரைக் காசநோயிலிருந்து தேவன் குணமாக்கினார். சந்தீப் சிங் மற்றும் அங்ரன்ஜ் குடிப்பழக்கத்தி லிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜித்வால், சுட்சக், ராய்கோட், கோட்லி, தரம்கோட், போபாரா, பிந்தர் காலன், சித்தேக் மற்றும் துடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; இங்குள்ள குடும்பங்கள் குடி மற்றும் புகையிலை பழக்கத்திற்குக் கட்டப்பட்டிருக்கும் நிலை மாற; பின்வாங்கிப் போன விசுவாசிகளான பிரேம், மன்னு, லாடி, ராகுல், கேஷா, விக்கி, ஷம்மி, மிட்டா, சுனித், குர்தேஜ் மற்றும் லக்கி ஆகியோர் விசுவாசத்திற்குள் வர; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் புதிய தொடர்பாளர்களான பாபி கௌர், ரேகா, கது சிங், கமல் கௌர் மற்றும் ஹீனா ஆகியோர் விசுவாசத்தில் உறுதியாக நிற்க ஜெபிப்போம்.

## 5 செப்டம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எசக்கியா R.
திரு. தர்மேந்திரா பரிச்சா

### பட்டாலா:
### வால்வி நேதாஜி டாடு & கல்பனா

**துதிக்க:** புதிதாக மூன்று பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. நமது ஊழியருக்கு நேர்ந்த பெரிய விபத்திலிருந்து அவரையும், குடும்பத்தினரையும் தேவன் பாதுகாத்தார். மணி, சத்யாவைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், சுக்விந்தரை மூச்சுத்திணறலிலிருந்தும், குலந்த் சபைக் குழு உறுப்பினரின் மகனின் திருமணம் எந்த ஒரு தடையும் இல்லாமல் ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காஷ்மீரோவிற்கு ஏற்பட்ட தோள்பட்டை எலும்பு முறிவிலிருந்தும், பீரோவின் இடுப்பு எலும்பு முறிவிலிருந்தும் தேவன் குணமாக்க; சோனு, நீப் இவர்களின் இரட்சிப்பிற்காகவும்; மது அருந்தும் பழக்கத்திலிருந்து இவர்கள் விடுதலைப்பெறவும்; நமது விசுவாசி ரிம்பியின் வாழ்க்கை குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## ஹரியானா

### பர்வாலா: பாபுபாய் & சரஸ்வதி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளது. பர்வாலா பணித்தளத்தில் நடந்த விடுமுறை வேதாகமப்பள்ளியை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். ஷாஹு பகுதியில் நமது விசுவாசி அலெக்ஸ் தனது குடும்ப வாழ்வாதாரத்திற்காக மருத்துவ பரிசோதனை மையம் ஒன்றை திறக்க தேவன் கிருபை செய்தார். பாபுவா கிராமத்திலுள்ள சுரேஷிற்கு இரத்த தொற்று நோயிலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். நமது விசுவாசி மந்தாவுக்கு மருத்துவமனையொன்றில் நல்ல வேலை கிடைக்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமார், பால்மீகி, அரோரா, நாயக், குமார் மற்றும் சோர்கர் இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்தின் மீது ஒரு திருப்புமுனை உண்டாக; கார்கோடா, ஹாசன் கார், பாபுவா, நயகாவ், கிரோடி மற்றும் கரந்தானி கிராமங்களில் அநேகமுறை சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோதிலும் சுவிசேஷத்திற்குச் செவி கொடுக்காத மக்கள் மனந்திரும்ப; சமென் கிராமத்தைச் சேர்ந்த ரோஷனி நெஞ்சு வலியிலிருந்தும், தேவிலால் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் மற்றும் கைபிபூர் ராமன் காசநோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## *மூன்றாவது மாடியிலிருந்து விழுந்தும் தேவகரம் பற்றிக்கொண்டது!*

*குஜராத் மாநிலம், ஜாலோத் பணித்தளத்திலுள்ள வகேலா கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி, கட்டிட வேலை செய்பவர். இவர் ஒருநாள் மூன்றாம் தளத்தில் கட்டுமான வேலை செய்துக்கொண்டிருந்தார். திடீரென்று கட்டிடச் சாரக்கட்டு உடைந்ததில் கீழே விழுந்தார். கீழே விழும்போது அவர் தெய்வாதீனமாக ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு உயிர் தப்பினார். மீட்புக்குழுவினருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டு உடனடியாக அவர்கள் வந்து எப்படியோ அவரைப் பாதுகாப்பாகத் தரைத்தளத்திற்கு கொண்டு வந்தனர். மூன்றாவது மாடியிலிருந்து விழுந்தும் மரணம் நேரிடாதபடி தாங்கிப்பிடித்த தேவகரத்தின் அன்பை நினைத்து தேவனுக்கு மகிமை செலுத்துவோம்.*

## 6 செப்டம்பர்
### திங்கள்

### ஹரியானா பிராந்தியம்:
**பிபாபா பானி & பித்திகா**

**துதிக்க:** இரண்டு இடங்களில் ஆலயக் கட்டுமானப்பணிகள் சுமூகமாக நடைபெறுகின்றன. ஷேகன்வாலிதானி கிராமத்தில் ஒரு ராஜ்புத் குடும்பமும், ஷாகின் தன்வாலி கிராமத்திலுள்ள சோர்கர் மக்கள் கூட்டத்தில் 2 குடும்பங்களும், தரியாபூரிலுள்ள பால்மீகி மக்கள் கூட்டத்தில் 4 குடும்பங்களும் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றன. 100 சிறுவர்களைக் கொண்டு அசோக் நகரில் விடுமுறை வேதாகமப்பள்ளி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். நமது சில திருச்சபைகளில் CCTV புகைப்பட கருவிகளைப் பொருத்த தேவன் உதவினார். சபை மூப்பர்கள் பலர் நமது ஊழியத்திற்குப் பல வழிகளில் உதவுகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிம்டிவாலா, பிரேம் நகர் ஆகிய பகுதிகளில் நமது ஊழியங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்து எதிர்ப்பு தருகிற பஞ்சாயத்து தலைவர்கள் மனந்திரும்ப; பின்ரயின் கிராமத்து திருச்சபையிலுள்ள வாலிபர்கள் வேதவசனத்தினால் மெருகூட்டப்பட; ஜிண்ட் மாவட்டத்திலுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையில் காணப்படும் மந்தநிலை நீங்க; அனைத்து திருச்சபைகளிலும் வேதபாட வகுப்பு குழுக்கள் துவங்கப்பட; சுயாதீன திருச்சபைப்போதகர்கள் நமது ஊழியங்களுக்கு விரோதமாக செயல்படுகின்ற செயல்களிலிருந்து மனந்திரும்ப; பட்டாலி, கனபிபூர் மற்றும் மத்தானா கிராமங்களின் ஆலயச்சுற்று சுவர் விரைவில் கட்டப்பட; விசுவாசிகளின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான நல்ல வேலைகள் கிடைக்க ஜெபிப்போம்.

## உத்தரகாண்ட்

### தினேஷ்பூர்:
**ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்**

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் 140 பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். குருநாம் கௌரை தொப்புள் வீக்கத்திலிருந்தும் திம்ரி பிளாக் கிராமத்திலுள்ள சிம்ரோவை நுரையீரல் தொற்றிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். கெடா கிராமத்தின் சீத்தலைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேஜா ஃபவுஜா கிராமத்தைச் சேர்ந்த தர்மேந்தர் வயிற்றுத் தொற்றிலிருந்தும், டைனும்பூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமாரி வெள்ளை திட்டுகளிலிருந்தும் சுகம் பெற; விடுமுறை வேதாகமப்பள்ளியில் கலந்து கொண்ட சிறுவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஜாஃபர்பூர் கிராமத்திலுள்ள நமது விசுவாசி ரிங்குவின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.

# 7 செப்டம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. இவாஞ்சலின் ஜெமி ராபி

## ராஜஸ்தான்

### அஜீத்கார்:

**ஜெய்பீர் சிங் & தேவி ராணி**

**துதிக்க:** ஹனுத்புரியா, சைவாத், கெஜ்ரோலி மற்றும் பம்ராடா ஆகிய கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கெஜ்ரோலி கிராமத்திலுள்ள மம்தாவும், அவர்கள் குடும்பத்தினரும் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். நமது விசுவாசி சரிதாவின் ஊக்கமான ஜெபத்தினால் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்த கெயர்சி தேவியை தேவன் விடுதலையாக்கினார். ரிங்குவின் கால் எலும்பு முறிவிலிருந்தும் ரமேஷின் கால்களிலிருந்த புண்களிலிருந்தும் தேவன் சுகம் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது தொடர்பாளர்கள் நற்செய்தியைக் கேட்ட பிறகு இயேசுகிறிஸ்துவைத் தங்கள் தனிப்பட்ட ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள; கல்யாண் மற்றும் ஷர்வான் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; சிதியா தேவியின் குடும்பத்தில் அமைதி நிலவவும் அவரது கணவரின் குடிப்பழக்கத்தால் குடும்பத்தைக் கவனிக்க முடியாத சூழ்நிலை மாறவும்; நாவல்காரிலுள்ள சரிதா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

### கேர்வாடா:

**பட்டேல் தேவுபாய் & ஜமுபேன்**

**துதிக்க:** உஜாரி கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது சபை ஆராதனைகளில் அதிகபட்சமாக 15 குடும்பங்கள் புதிதாகக் கலந்துகொள்கின்றனர். புதிய தொடர்பாளர்களான பிரியங்கா, மனிஷா, சுனிதா ஜெபத்தின் பலனால் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டனர். லஷ்மணனுக்கு மயக்கத்திலிருந்தும், லைலாவிற்குப் பைத்திய நிலையிலிருந்தும் நிமல்பேனிற்குச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லக்ஷ்மன், கடவா, ரமேஷ், லால்ஜி, பிரவின், ஹரீஷ், ஜித்தேந்தர்ராவ் மற்றும் ஹாக்ரா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளின் பயிர் அறுவடைக்குத் தேவையான நல்ல மழை பெய்ய; பாபரி கிராமத்திலுள்ள இந்து பேனை வயிற்றுத் தொற்றிலிருந்தும், ஆஷாபேனை வயிற்றுக் கட்டியிலிருந்தும், கன்குபேன் வாயிலிருக்கும் கட்டியிலிருந்தும் தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

## செய்வினை செயலிழந்தது!

*மகாராஷ்டிரா மாநிலம், நேர் பணித்தளம். நகரி கிராமத்திலுள்ள விமல்பாய் பாலு பவார் என்பவர் பில்லிசூனிய மந்திரத்தால் 2 வருடமாக அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். அவரது நிலை மிகவும் மோசமாக இருந்தது. பில்லி சூனியத்தினால் அவர் சரீரத்திலிருந்து தானாகவே முடிகள், சிலவகையான பருப்பு விதைகள், மண் போன்றவை வெளியே வரும். அநேக மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்றும் விடுதலையில்லை. கடைசியாக ஜெபத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தனர். ஜெபத்திற்குப்பின் தேவன் அவரை முற்றிலும் சுகமாக்கினார். அதன் விளைவு, அவ்வீட்டாரனைவரும் இன்று இரட்சிக்கப்பட்டுத் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். அல்லேலூயா!*

# 8 செப்டம்பர்

புதன்

*உபவாச ஜெபநாள்*

**அனுப்கார்: போடார் அம்ருத் பாய் & சுவேரா மார்த்தா**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது ஊழியத்திற்குப் புதிதாக 2 தொடர்பாளர்களை தேவன் கொடுத்துள்ளார். நமது விசுவாசி ஷியாம் சிங் புதிதாக மளிகை கடை அமைக்க தேவன் உதவி செய்தார். நமது விசுவாசிகள் தங்கள் பிள்ளைகளின் திருமணங்களைக் கிறிஸ்தவ முறைப்படி நடத்த தேவன் உதவிசெய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகேந்திரசிங், சத்பால், அருண், சுமித்ரா, ஷியாம் பாபு மற்றும் பாபுவின் குடும்பத்தினர்களுடைய இரட்சிப்பிற்காக; புதிய தொடர்பாளர்களான வித்யா, மல்கித் சிங் மற்றும் லகா சிங் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஆலயம் கட்டப்பட ஒரு நல்ல நிலம் கிடைக்க; புதிய தொடர்பாளர்கள் பாபு மற்றும் குவிந்தர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; மகேந்திர சிங் குடும்பத்தில் அமைதியும் சமாதானமும் நிலவ ஜெபிப்போம்.

## கைர்த்தல்:

**செல்வராஜ் & செல்வம்மாள்**

**துதிக்க:** நட் இன மக்கள் மத்தியில் நடைபெற்ற வெளி சந்திப்பு ஊழியத்தில் முதன்முறையாக 120 பேர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விருப்பத்துடன் கேட்டனர். எந்த ஒரு தடையும் இல்லாமல் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வீட்டுத் திருச்சபையின் தலைவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர; நமது விசுவாச வாலிபப்பிள்ளைகளுக்குத் தேவையான வாழ்க்கைத்துணைகள் கிடைக்க; நமது வீட்டு ஜெபக்கூடுகை மற்றும் சபைக்கூடுகைகளில் புதிய விசுவாசிகள் தவறாமல் கலந்து கொள்ள; எல்லா விசுவாசிகளும் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

**காட்டம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. சரசால் கிராமத்திலுள்ள திருச்சபையில் காணப்பட்ட பிரச்சனைகளை உள்ளூர் விசுவாசிகளைக்கொண்டு தீர்த்து ஆராதனைகளை மீண்டும் தொடர தேவன் உதவி செய்தார். நமது சபையின் மூப்பர் சாரதா பஸ்வான் திருமணமாகி 4 ஆண்டுகளுக்குப் பிறகு கருத்தரிக்க தேவன் உதவி செய்தார். பொய்யான குற்றச்சாட்டு காரணமாகக் கைது செய்யப்பட்டிருந்த சபையின் மூப்பர் ஷிவே பிரசாத்துக்கு ஜாமீன் கிடைக்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒரு குழுவாக விசுவாசிகளுக்கு நல்ல ஆவிக்குரிய பராமரிப்பு வழங்கும் திட்டத்திற்காகவும், தன் கணவனை இழந்துள்ள அனிதாவின் ஆறுதலுக்காகவும்; நமது முன்னாள் சுதேச ஊழியர் நரேந்திர குமாரின் பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்படவும், ராஜ்பகதூர் ரவிசங்கர் மற்றும் ரம்ஜன் குடும்பங்களில் சமாதானம் நிலவவும் ஜெபிப்போம்.

# 9 செப்டம்பர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏசுரெத்தினம் தியாகராஜன்
திரு. அனில்குமார் பிசோயி
திருமதி. ராணி சுகாந்தோ சிங்
திரு. ஜீவானந்தன் M.
செல்வி. ராந்தே நய்னாபேன் தேவ்ஜிபாய்

### கோண்டா சிறுவர் விடுதி:

**ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா**

**துதிக்க:** நட் இன மக்களைக் கொண்ட காகோல் கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. நமது விசுவாசி வினய்ராம் அவரது உறவினர்கள் பலரைக் கிறிஸ்துவின் மந்தைக்குள் அழைத்துக்கொண்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நட் இனத்தைச் சார்ந்த நமது விசுவாசி காதுர் முகேஷ் மூலம் அநேக நட் இன மக்களைச் சந்தித்து சுவிசேஷம் சொல்லும் திட்டத்திற்காகவும், பள்ளிகள் திறக்கப்படாத இந்த இக்கட்டான சூழ்நிலையில் விடுதிப்பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும், நமது சபை ஆராதனைகளில் கலந்துகொள்ளும் புதிய நபர்களுடைய வாழ்க்கையில் ஜீவனுள்ள தேவனின் அற்புதத்தை அவர்கள் அனுபவிக்கவும் ஜெபிப்போம்.

### கான்பூர் பிராந்தியம்:

**ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி**

**துதிக்க:** 34 கிராமங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளியை தேவன் ஆசீர்வதித்துக்கொடுத்தார். ரசூல்லா பாத் மற்றும் மத்ராம்பூர் சபைகளின் சுற்றுப்புற சுவர் கட்டும் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. பஸ்தியில் நடைபெற்ற 50-ம் ஆண்டு பொன்விழாவில் வட இந்தியப் பணித்தள ஊழியர்கள் தங்கள் அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக்கொள்ள தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன்னார்வ ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுடைய பயிற்சிக் கூடுகை நிகழ்ச்சியை தேவன் ஆசீர் வதித்துத் தர; ஆவத் பகுதியில் பணித்தளம் திறப்பதற்கான ஆய்வு பணிகள் வெற்றி யாய்ச் செய்து முடிக்கப்பட; ஜீப்குழு மூல மாக வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் அநேகர் இரட்சிக்கப்பட்டு, இயேசுவின் மந்தையில் இணைய ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா**

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் நடத்தப் பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளிகளில் 160 சிறுவர் சிறுமியர் கலந்துகொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். பிதர்வார் மற்றும் கிட்டோர்டா கிராம விசுவாசிகளே அங்கு நடைபெற்ற VBS நிகழ்ச்சிகளின் அனைத்து தேவைகளை யும் பூர்த்தி செய்தனர். நமது புதிய தொடர் பாளர்களான அதார்சிங் மற்றும் நரேந்திரர் குடும்பத்தினர் நம்முடைய ஊழியங்களுக்குப் பலவிதங்களில் பேருதவியாக இருக்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மெஹாகான் கிராமத்தில் புதிதாகச் சபை ஆராதனைக்கூடுகை துவங்கப்படவும், நமது ஆலய ஆராதனை களில் கலந்துகொள்ளும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும்; நமது சபை மூப்பர்கள் தேவனுக்கென்று தங்க ளுடைய நேரங்களை ஒதுக்கி ஆலயச் செயல்பாடுகளிலும், வெளிப்புற சந்திப்பு நிகழ்ச்சிகளிலும் தாமாகவே முன்வந்து உற்சாகமாய்ச் செயல்பட ஜெபிப்போம்.

## 10 செப்டம்பர்
### வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சப்னா ஓம் பிரகாஷ்

### கர்கோன்: தாமஸ் சோரேன், ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. 25 நபர்கள் கிறிஸ்துவுக்குள் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். நயாபுரா கிராமத்தில் விசுவாசிகளின் கூடுகை தடையின்றி நடத்தப்பட தேவன் கிருபை செய்தார். கடும் வயிற்றுப் பிரச்சனையினால் கஷ்டப்பட்டு வந்த போகுட் கிராமத்தைச் சார்ந்த ராகேஷ் அற்புதமாகச் சுகம் பெற்றார். சேமல்தா கிராமத்தைச் சார்ந்த சரிகா பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஈச்சாப்பூர் கிராம தேவதாசி தீத் சுகப்பிரசவத்தினால் குழந்தைப் பெற்றெடுக்க; சிம்மல்தா கிராம ராதா இரத்தச்சோகையிலிருந்தும், போகுட் கிராம ரேகாவிற்கு வயிற்றுக் கட்டியிலிருந்தும் பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### பால்: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** புதிதாக 41 பேர்கள் கிறிஸ்தவ புதுவாழ்விற்குள் வந்துள்ளனர். மூன்று கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப் பட்டது. கண் தொற்று காரணமாக இரண்டு கண்களிலும் பார்வையை இழந்த சுனியா கிராம பாரூ என்பவருக்குப் பார்வை கிடைக்க தேவன் உதவி செய்தார். போர்செல் பாடா கிராமத்தில் ஆராதனை ஆரம்பிக்க தேவன் கிருபை பாராட்டிய மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காதில் புற்றுநோயினால் கஷ்டப்படும் திமோனியா கிராம சாந்திக்கு தேவன் நல்ல சுகத்தைத் தர; ஹேனா, செவந்தி ஆகியோர் வலிப்பு நோயிலிருந்து அற்புதமான சுகத்தைப் பெற்றுக்கொள்ள; தீய ஆவியின் அடிமைத்தனத்திலிருந்து தூடியா கிராம ராமா என்பவர் விடுதலை பெற பாரத்தோடு ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### பர்ஹர்வா :
### கிரிஷான் குமார் & சாந்திலால்

**துதிக்க:** தராம்பூர் பகுதியில் கரண்தாஸ் என்பவரின் இல்லத்தில் வெளிசந்திப்பு ஊழியத்தின் காரணமாக இரவு ஜெபக் கூடுகை நடைபெற தேவன் உதவி செய்தார். ஜோகிடோலா, பிந்துபரா, மோகன்பூர், பராரியா, பாபன்காமா, ஜீவன்பூர், டிக்கி, பக்ஷ்ட்கிபூர், ஹரிரன்பூர், தேவ்பூர், ஷியாம்பூர், ஹத்திகர், ஜாம்பூர், ஷிவகாட் மற்றும் மாஜ்தா கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர் மதுரவி தாஸ் தனது விசுவாசத்தைக் கர்த்தருக்குள் தைரியமாக அறிக்கையிட; ஹத்தி கார் பணித்தளத்திலுள்ள மதுமாலா, விஸ்வநாத் தாஸ், பிங்கி தாஸ், ரீனா தாஸ், மனோஜ் தாஸ் மற்றும் மஹேந்திரஷா ஆகியோர் இரட்சிக்கப்பட; படக்காட்சி வாயிலாக பிஷான்பூர், ஜுகிபானா, அடிதுல்கர் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் ஆசீர்வதிக்கப்படவும், கிறிஸ்து வின் அன்பைப் புரிந்து கொள்ளவும்; 51 கிராமங்களில் பரவியிருக்கும் 126 விசுவாசிகளின் குடும்பங்களுக்காகவும், ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் கருத்தாய் ஜெபிப்போம்.

## 11 செப்டம்பர்

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கஷிலி எக்டோ சோபி

செல்வி. மெர்சி M.H. சுவாஸி

### கெய்ராஜோடி:

**சுச்செள & காம்புங் தாபா**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை இரட்சகராக அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். நமது சுதேச ஊழியர் மார்கஸ் மால்தோவின் மகன் பத்ரஸ் மால்தோவின் திருமணம் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உள்ளூர் சுதேச ஊழியர் தேவ னுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். அவருடைய குடும்ப ஆறுதலுக்காக; லங்கோடி சபையில் வந்து தேவனை ஆராதிக்க முடியாதபடி ராம்சந்திர மால்தோவிற்கு ஏற்படுகின்ற தடைகள் விலக; நமது விசுவாசிகளின் விவசாய அறுவடைக்குத் தேவையான நல்ல மழைக்காகவும்; அதன் மூலம் தங்களது உழைப்பின் பலனைப் பெற்றுக் கொள்ளவும், ரோஷேனா மால்தோவை சுவாசப் பிரச்சனைகளிலிருந்தும் பெஞ்சமின் மால்தோ, எஸ்தர் மால்தோ கப்புலு மால்தோவை பல்வேறுவிதமான பெலவீனங்களிலிருந்தும் தேவன் சுகப் படுத்த ஜெபிப்போம்.

### சந்தால் தும்கா பிராந்தியம்:

**இம்மானுவேல் முர்மு & நிலா ஹன்ஸ்தா**

**துதிக்க:** புதிதாக 25 நபர்கள் கிறிஸ்து வண்டை வந்துள்ளனர். புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுள்ளன. சபை வாரியாக விசுவாசிகளின் நிகழ்ச்சி நிகழ்வுகளை பத்தாரா பகுதியில் நடத்த தேவன் உதவி செய்தார். விசுவாசிகளின் விவசாயத் திற்கேற்ற நல்ல ஆசீர்வாத மழையைத் தேவன் கட்டளையிட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாய்பஹாரி, பத்தாபஹாரி, பென்டிரா, ரோலாகிராம், போர்லாங் மற்றும் தோகாடங்கா ஆகிய பகுதிகளில் ஆலயங்கள் கட்டப்பட; நம்முடைய ஊழியத்தின் வளர்ச்சிக்காக ஒரு சுதேச ஊழியர் துரிதமாக நியமிக்கப்பட; ரோடான் கிராமத்தைச் சார்ந்த ஷிபோன் மராண்டியை மனநிலை பாதிப்பிலிருந்தும், கர்மாடன் கிராமத்திலுள்ள ஜீனாஸ் முர்முவை வலிப்பு நோயிலிருந்தும், பிரபாத்பூர் கிராமத்திலுள்ள சந்தோஷ் பண்கியைக் காசநோயிலிருந்தும் தேவன் சுகமாக்க கருத்தாய் ஜெபிப்போம்.

### சந்தால் மேம்பாட்டு வளர்ச்சிப் பிராந்தியம், சிறுவர் பராமரிப்பு & பகையா சிறுவர் விடுதி:

**பீட்டர் பிரபாகரன் & விமலா**

**துதிக்க:** நமது விடுதிப்பிள்ளைகள் தங்களைப் பராமரிக்கும் ஆதரவாளர் களுடன் நல்ல தொடர்பு வைத்துள்ளனர். கிட்டத்தட்ட 10-ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் தங்கள் இறுதித்தேர்வுகளில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாத்ரோ CDC பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் ஆலோசனைக்கூட்டம் ஒன்றை நடத்தி அறிவுரைகள் வழங்க தேவன் உதவி செய்தார். பலத்த காற்றினால் சந்தனா வீட்டின் மேல் இரண்டு மரங்கள் விழுந்தாலும் வீட்டிலுள்ள நபர்களுக்கு எந்தச் சேதமும் அணுகாமல் தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பகையா ஆண்கள் விடுதிக்குத் தகுந்த இடம் கிடைக்க; விடுதியில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களின் ஆவிக்குரிய நிலையை மேம்படுத்துவதற்காக; ஒழுங்குச் செய்யப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் தடையில்லாமல் நடைபெற ஜெபிப்போம்.

## 12 செப்டம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேபல் கிறிஸ்டோபர்

திருமதி. இர்காா் ரேஷ்மா மாருதி

### தெலோ: பால்ராஜ் & ஜெபஜோதி

**துதிக்க:** புதிதாக 46 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசப்பாதையில் அடியெடுத்து வைத்துள்ளனர். முர்காபாணியைச் சேர்ந்த சுனில் சோரேன் மற்றும் அவரது குடும்ப நபர்களைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்ததின் விளைவாக அனைவரும் கிறிஸ்துவின் மீது தங்களது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றனர். லாட்கனி கிராமத்தைச் சார்ந்த சாம்சன் மராண்டி, துரியா கிராமத்தைச் சார்ந்த ப்ரோனிக்கா மராண்டி ஆகியோரை தேவன் காசநோயிலிருந்து சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூர்கா, லோஹண்டா, பத்தர் காடா ஆகிய கிராமங்களில் உள்ள புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காகவும், கிறிஸ்துவில் தங்களது விசு வாசத்தை அறிக்கையிடவும்; நமது விசுவாசிகள் விளைச்சலில் எவ்வித சேதமு மின்றி நல்ல அறுவடையைத் தங்கள் வயல்களில் பெற்றுக்கொள்ள; கதுவா, கோர்டிஹா மற்றும் ராணிதி கிராமங்களில் ஆலயக்கட்டுமானப் பணிகளில் சாந்து பூசும் காரியம் விரைவில் முடிவுபெற ஜெபிப்போம்.

### படிடோலா:
### ஜீவன் ரஞ்சன் & சினிக்தா

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். திலக் கிராமத்தில் புதிதாக ஒரு திருச்சபையை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்தார். சஞ்சோடி கிராமத்தில் புதிய குடும்பம் ஒன்று இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். CDC-யில் தங்கிப் படித்த 8 மாணவர்களும் பத்தாம் வகுப்புத்தேர்வில் தேர்ச்சி பெற தேவன் உதவி செய்தார். விசுவாசிகள் தங்கள் சாகுபடி பணிகளை மகிழ்ச்சியோடு தொடங்க உதவி செய்த தேவனின் இரக்கத்தை நினைத்து துதிப்போம்.

**ஜெபிக்க:** உல்குடு, லேப்ரி, போர்பண்ட், இலக்கி, சிங்நாத், கிசும் மற்றும் போக்நதிக் ஆகிய கிராமங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை எல்லாம் தேவன் ஆசீர்வதித்துக்கொடுத்தார். ஜாண் முர்முவை மனஅழுத்தத்திலிருந்தும், பஞ்சு பசராவைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்தும் தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

### திக்குவாயும் சுவிசேஷத்தைப் பரவச்செய்திடுமா?

*மகாராஷ்டிரா மாநிலம், முக்காடா பணித் தளத்தில் பொக்ராட்டி கிராமத்திலுள்ள அங்கஸ் என்பவர் மிகவும் தாழ்மையானவரும், மெது வாகப் பேசும் நாவையும், தடுமாறிப் பேசும் திக்குவாயையும் உடையவர். இக்கிராமத்தில் நடந்துக்கொண்டிருந்த ஆராதனைக் கூடுகைகள் சுவிசேஷ எதிர்ப்பாளர்களினால் நிறுத்தப்பட்டிருந்தது. தேவன் அங்கஸிடம், "இந்தக் கிராமம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவி" என்று கூறினார். அங்கஸும் அவரது மனைவியும் தாமாக முன்வந்து இயேசுவின் சுவிசேஷத்தைக் கிராமம் முழுவதும் அறிவிக்கத் தொடங்கினர். இதன் விளை வாக அநேகர் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் வாழ்வில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். நிறுத்தப்பட்டிருந்த ஆராதனைக் கூடுகைகள் தேவநாம மகிமைக்காக மீண்டும் துவங்கப்பட்டன. அன்று திக்குவாயும் மந்த நாவுமுள்ள மோசேயைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்த தேவன், இன்றைக்கும் அங்கஸைக் கொண்டு தமது சுவிசேஷத்தைப் பரவச் செய்ததற்காக தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்!*

## 13 செப்டம்பர்
திங்கள்

### சந்தால் தலைமைத்துவப் பயிற்சி மையம் & கதுவா:
**சுந்தர் துரை & மெல்பின் ரெஜினி**

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை விசுவாசத்துடன் நுகர்ந்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளின் விவசாய விளைச்சலுக்குத் தேவையான நல்ல மழையைத் தந்து தேவன் ஆசீர்வதித்தார். மகுதன் கிராமத்திலுள்ள நமது புதிய தொடர்பாளர் ரான்தன் ஹன்ஸ்தாக் அவர் கணவர் இறந்த பிறகும் அவருக்கும் 3 பிள்ளைகளுக்கும் தேவன் செய்த அற்புதங்களையும் அதிசயங்களையும் ஒவ்வொரு நாளும் அனுபவிக்க தேவன் உதவி செய்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது மாநிலத்திலுள்ள 39 திருச்சபைகளிலும் ஒவ்வொரு மாதமும் ஒரு குடும்பத்தைச் சபைக்கு கொண்டு வரவேண்டும் என்ற தரிசனத்தால் விசுவாசிகள் நிரப்பப்பட; திலபாணித் திருச்சபை மூப்பர் மாத்தே முர்முவின் இறப்பினிமித்தம் மனதளவில் பாதிக்கப் பட்டிருக்கும் குடும்பத்தினரின் மனஆறு தலுக்காக; திலபாணி மற்றும் சோட்டகாகரி பகுதிகளில் சுவிசேஷத் திற்கான திறந்த வாசலை தேவன் தரவும், சுவிசேஷ வார்த்தைகளுக்கு மக்கள் செவிகொடுக்கவும் கருத்தாய் ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்
### பாக்குவாஹாட்:
**ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி**

**துதிக்க:** புதிதாக 21 நபர்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரங்கமாடியா கிராமத்திலுள்ள உஜித் முர்முவிற்கு கை உணர்வின்மையிலிருந்தும், சுங்கு டுடுவிற்கு மஞ்சள் காமாலையிலிருந்தும், சல்போனா கிராமத்திலுள்ள சுட்கி டுடுவிற்கு நீண்ட நாட்களாக இருந்து வந்த தீராத வயிற்றுவலியிலிருந்தும் தேவன் சுகம் கொடுத்தார். சல்போனா கிராமத்திலுள்ள சீத்தா டுடுவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீபத்தில் தன் மகன் சாமுவேலை இழந்த சாம் முர்வின் மனஆறுதலுக்காக; முத்தடங்கா கிராமத்தைச் சேர்ந்த சோய்லென் டுடுவின் குடும்பத்தில் சமாதானம் நிலவ; வாழ்வாதாரத்திற்காகப் பிற மாநிலங்களுக்கு புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் ரவிபால் டுடு, உஜல் டுடு, பாபுலால் முர்மு, ரவி டுடு மற்றும் லுக்கின்தர் ஹன்ஸ்தா ஆகியோரின் விசுவாசப் பாதுகாப்பிற்காக; புதிய விசுவாசிகளான சிரஞ்சீத் சோரேன், ரவி முர்மு ஆகியோர் சமுதாய தடைகளைக் கடந்து சபை ஆராதனைகளில் கலந்துகொள்ள ஜெபிப்போம்.

## 14 செப்டம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜாண் டேவிட் M.

### தபன்:
### கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** முராரிப்பூர் கிராமத்திலிருந்து 4 நபர்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். 15 கிராமங்களில் வீடு வீடாகச் சென்று விசுவாசிகளைச் சந்தித்து விசுவாசத்தில் பெலப்படுத்த தேவன் உதவி செய்தார். இயேசு திரைப்பட நிகழ்ச்சியை ஏறத்தாழ 600 நபர்கள் கண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். மஹிபூர் கிராமத்தைச் சேர்ந்த பிஸ்வநாத் ஹன்ஸ்தக்குவை ஞாபக மறதி நோயிலிருந்தும், அநேக விசுவாசிகளைப் பல்வேறு நோய்களான வெப்ப காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வயிற்றுப்புண், வைரஸ் காய்ச்சல், டைஃபாய்டு மற்றும் மஞ்சள் காமாலைநோய்களிலிருந்தும் சுகமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பரிமல் முர்முவின் குடும்பத்தில் சமாதானமும் அமைதியும் நிலவ; போட்னர், கிஸ்துபூர், மிர்சாபூர், பாகுரங்கா மற்றும் ஹொஸைன்பூர் கிராமங்களில் ஆராதனை குழுக்கள் அமைக்கப்பட; நமது விசுவாசிகள் தங்களுடைய சொந்த அனுபவ சாட்சிகளை நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தைரியமாய்ச் சொல்லுவதற்கு முன்வர; நக்டஹார் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

### ஜியாகன்ஜ்:
### எம். ஜாண் & செலினா ஜாய்ஸ்

**துதிக்க:** சோர்மேக்னா, ஹரிகிருஷ்ணாபூர், கோலாபடி, கேவா டோலா, குல்படியா, போலாஜி டங்கா, மத்ராபூர், பல்லிகிராம் மற்றும் ஜம்ஷர்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். நிரன் மால்தோ, அருண் மால்தோ, ரவி மால்தோவின் முழு குடும்பத்தினரும் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டவர்களும், துண்டுப்பிரதியைப் பெற்றவர்களும் புதிய ஏற்பாடு நூலை பெற்றுச் சென்றவர்களும் தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்து தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கையிட; புதிய தொடர்பாளரான ஜம்ஷர்பூர் கிராம சோஸ்டி மால்தோ மனநோயிலிருந்தும், கோடாலா கிராம சிபு மால்தோ காலில் இருக்கும் கட்டியிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

### கங்காராம்பூர் : தீஹே & சரணி

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் சேர்ந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது, கான்தோ கிராமத்தில் ஒரு புதிய ஆராதனை மையத்தைத் துவங்க தேவன் உதவி செய்தார். நமது விசுவாசிகள் கால நிலை சாதகமாக இருப்பதால் தங்கள் நிலங்களைப் பராமரித்து வளர்ப்பதில் மிகவும் தீவிரமாக உள்ளதால் இப்படிப்பட்ட கால சூழ்நிலையை அமைத்து ஆசீர்வதிக்கிற தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தோஹாபூர் கிராமத்திலுள்ள சபையின் மூப்பர் மோனு ஹஸ்தக்கின் மனைவியின் மனந்திரும்புதலுக்காகவும், மது குடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும்; கான்தோ கிராமத்திலுள்ள லுக்கி சோரேன் வயிற்றில் காணப்படும் கட்டியிலிருந்து சுகம் பெற; பபன்கா கிராமத்தில் உள்ள மோனி மராண்டியை நாள்பட்ட காதுவலியிலிருந்து தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

## 15 செப்டம்பர்

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வசாவா பாங்சிங் மௌல்யா
திரு. பால் தயாசிங், திருமதி. சாவித்திரி குமார்
திருமதி. எமிமாள் திலக்

### ராணிகன்ஜ்:

### துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை அறியத் தொடங்கியுள்ளனர். புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் உரைக் கப்பட்டுள்ளது. சாகர் டிகி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது தேவன் ஊழியத்திற்கென்று திறந்த வாசலைத் தந்துள்ளார். கர்த்தருடைய பெரிதான கிருபையால் இன்னும் ஒரு குடும்பம் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிமோல்கண்டி கிராமத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் மனந்திரும்பு தலுக்காக; சிமோல்கண்டியிலுள்ள பாகு சோரேன், ரால்குட்டு கிராமத்திலுள்ள சிட்டான் முர்மு ஆகியோர் இரட்சிக்கப்பட; சுர்ஷாதாலி, ஹமாடிகி, மிர்தாகண்டி கிராமங்களிலுள்ள நபர்கள் சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு 'இயேசுவே தேவன்!' என்றும், 'உலகை இரட்சிக்கிறவர்!' என்றும் தங்கள் நாவினால் அறிக்கையிட ஜெபிப்போம்.

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ நறுமணம் வீசியுள்ளது. ஷியாம்லால் ஹன்ஸ்தாவை மஞ்சள் காமாலையிலிருந்து தேவன் சுகமாக்கினார். கசீம்பூர், சிங்கியா மற்றும் டுயடோலா பகுதிகளில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்துக்கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது மிஷனெரிகளின் நல்ல ஆரோக்கியத்திற்காகவும், சாதகமற்ற காலநிலை காரணமாகச் சரீரத்தில் ஏற்படும் பல்வேறு பெலவீனங்களிலிருந்து அவர்கள் குணமடையவும்; பினோத் ஹெம்ரோம் பித்தப்பை வலியிலிருந்தும், பூனா கிராமத்தி லுள்ள பிஸ்நாத் மராண்டி நீண்ட நாட்களாகக் காணப்படும் தீராத தலை வலியிலிருந்தும் சுகம் பெற; கசம்பூரிலுள்ள பாபு ஹன்ஸ்தா பாஜி முர்மு குடும்பங்கள் சுவிசேஷத் திற்கு அதிக வாஞ்சையுடன் செவிகொடுக்க ஜெபிப்போம்.

### பாலூர்காட்: ஹரமோகன் &சூசம்மா

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்கள் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளதோடு 6 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். சபை மூப்பர்கள், விசுவாசிகள் சிறிய ஜெபக்குழுத்தலை வர்கள், மற்றும் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சிக்கூடுகைகளைப் பல்வேறு முறை களில் செயல்படுத்த தேவன் உதவி செய்தார். விசுவாசிகள் மிகுந்த ஆர்வத்துடன் ஊழியத்தில் இணைகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முன்சிபூர், பசனை. அட்குரி, லிட்டோதங்கா அரக்தாங், பெல்டா, டாங்கி, டெட்ஜி டோலா, கோக்ராம், பில்பாடா, காசிபூர், டௌரல்டப்கா, துண்டகாரா, மாக்வா, ஜராய் மற்றும் மியானர் கிராமங்களில் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட; கோட்கட்டாவிலுள்ள பிஸ்வநாத் முர்மு, சோனத்தான் முர்மு, அமீன் முர்மு ஆகியோரின் இரட்சிப்பிற்காக; நீரல் மராண்டி பக்கவாதத்திலிருந்தும், ரூபாலி மராண்டி மஞ்சள் காமாலையி லிருந்தும், முனி மராண்டி கழுத்திலுள்ள காயங்கள் ஆறும்படியாகவும், அமோட்பு கிராமத்திலுள்ள பூபாய் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்தும் விடுதலை பெற; ஹரிபூர் ஜடாய், அபால், கேஷாபூர் ஆகிய பகுதிகளில் தற்காலிகமாக ஒரு ஆராதனை மையம் துவங்கப்பட பாரத்துடன் ஜெபிப்போம்.

**16 செப்டம்பர்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹேனா குமாரி கன்சல்வ்ஸ்

# அஸோம்

## மஜுலி:

**ரபீந்திர முர்மு &**
**செலினா மராண்டி**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. சிராம்புரியா ஆலயம் மூங்கிலால் கட்டப்பட்டிருந்ததை மாற்றி சீரமைத்து புதிதாகக் கட்டி முடிக்கப்பட தேவன் உதவி செய்தார். சிராம்புரியா விசுவாசிகள் அனைவரும் சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்துகொண்டு தேவனை ஆராதிப்பதற்காய் நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக மஜுலி பகுதியின் வடக்குப் பகுதியில் புதிய பணித்தளம் திறக்கப்பட; சமீபத்தில் சுப்ஹான் ஷெரி ஆற்றின் ஓடுநீரால் பிரிக்கப்பட்ட மோலாயச்சப்போரி பகுதியில் பின்தொடர் பணி துவங்கப்பட; சரிகுரியா மற்றும் லீலாபாரி கிராமங்களில் மேலும் இரண்டு புதிய ஆராதனை மையங்கள் துவங்கப்பட ஜெபிப்போம்.

## ஜோனை:

**சுனில் பிரசாத் சிங் &**
**ஜாய் பெல்லா**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். தேவன் பாடி மற்றும் கின் மோமோரா கிராமங்களில் சுவிசேஷத்திற்கான திறந்த வாசலை தந்துள்ளார். லைமேக்குரி கிராமத்தில் புதிதாக ஒரு ஆராதனை மையத்தைத் துவங்க தேவன் உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

ஜெபிக்க: அனிதா பெகு குடும்பம், ராகேஷ் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர; மோனாஸ் மாங்க், பிங்கி குடும்பம், வினோத், தீரீ, லிட்டும் ஜிட்டன் ஜீவன், நிமல், பையிட்டி, ரோன்ஜன் பாடி ஆகியோர் கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

# சத்தீஸ்கட்

## பிரதாப்பூர்:

**தினேஷ் குமார் & நீத்து**

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகள் விளைநிலங்களுக்குத் தேவையான நல்ல மழையால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட தேவன் வாசல்களை திறந்துள்ளார். புதிய தொடர்பாளர்களான சுரேஷ், சாந்த்லால், பித்தல் மற்றும் சோமர்சாய் ஆகியோர் நமது ஊழியங்களுக்கு உதவிகள் செய்ய முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தின் விரிவாக்கத்திற்காக பணித்தளங்களில் புதிதாக சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; பேகோனா மற்றும் கங்கோட்ரீயிலுள்ள திருச்சபை விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது புதிய தொடர்பாளரான நீதா தேவன் மீது வைத்துள்ள விசுவாசத்தை அறிக்கையிட; சுரேஷ் பக்கவாதத்திலிருந்தும், கயாஷு கால் வலியிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## 17 செப்டம்பர்
வெள்ளி

### பத்தல்காவ் விடுதி:
**லவ்லின் புன்யா & கிரண் பெங்ரா**

**துதிக்க:** நமது விடுதிப்பிள்ளைகளை தேவன் இந்த மழைக்காலங்களில் விசேஷமாகப் பாதுகாத்தார். நமது விடுதியின் சமையலறை மற்றும் உணவருந்தும் அறைகளில் தரைச்செங்கல் பதித்து முடிக்க தேவன் கிருபை செய்தார். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் சந்திப்புக்கூட்டம் குழந்தைகளின் மேம்பாட்டு வளர்ச்சிக்கும், நம்முடைய வளர்ச்சித் திட்டத்திற்கும் உதவியாக இருந்தது. புதிய கல்வியாண்டிற்கான சேர்க்கை சிறப்பாக நடைபெறுகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்த ஆண்டில் குழந்தைகளின் கல்வி மற்றும் ஆன்மீக வாழ்க்கைக்காகவும்; இந்த கல்வியாண்டில் புதிதாகச் சேர்ந்துள்ள மாணவர்கள் விடுதியின் சூழலுக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள ஜெபிப்போம்.

### பத்தல்காவ்:
**ஆர். தாமஸ் & ரெஜினி**

**துதிக்க:** புதிதாக 24 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். கர்த்தருடைய கிருபையால் குருக்ஸ் மொழியில் புதிய ஏற்பாடு ஆடியோ வேதாகமத்தை வெளியிட தேவன் உதவி செய்தார். இதன் மூலம் தேவனுடைய வார்த்தையானது கல்வியறிவில்லாத விசுவாசிகளுக்குப் பேருதவியாக இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவனுடைய சுவிசேஷ வார்த்தையை ஒவ்வொரு மூலை முடுக்கிலும் கொண்டு செல்வதற்காக 150 சுவிசேஷ வசனத்தைக் கேட்கும் குழுக்களை உருவாக்கும் திட்டத்தை தேவன் ஆசீர்வதித்துத் தர; வேதாகம மொழிப்பெயர்ப்பு ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக மிகவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

## ஒடிசா

### பல்லகாரா:
**பாசுதேவ் மால்தோ & பசந்தி**

**துதிக்க:** லன்ஜிபோடா மற்றும் பயாகு முட்டியா கிராமங்களில் புதிதாக 5 பேர் கிறிஸ்துவை அறிக்கையிட்டுள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. ஜுவாங் சமுதாயத்தைச் சார்ந்த நமது ஆலய மூப்பர்கள் ஊழியத்தில் இணைந்து உற்சாகமாய்ச் செயல்பட முன்வந்துள்ளனர். அந்தேரி, மமலபோஷி ஆகிய திருச்சபையினர் அவர்களாகவே நிதியைக் கண்டுபிடித்து வாலிபர் கூடுகை, பெண்கள் கூடுகையை நடத்த தேவன் உதவியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மமலபோஷி கிராமத்தில் சுவிசேஷத்தை எதிர்ப்போர் மனந்திரும்ப; பரதேவ்டா, நுஹான், ஃபைபால் ஆகிய பகுதிகளின் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் புர்புரா, போர்முன்டா, தாம்புரரு, ரோய்ரா ஆகிய கிராம விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## 18 செப்டம்பர்
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜாண் ஸ்டீபன்

# குஜராத்

## அஹ்வா & டாங்ஸ் வெளிப்புற சந்திப்பு ஊழியம்:

### பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

**துதிக்க:** மிலன், வசுரன், வாட்பாடா, அம்தவா மற்றும் அவ்லிமால் ஆகிய கிராமங்களில் புதிய தொடர்பில் பல குடும்பங்களைத் தேவன் தந்துள்ளார். புதிய தொடர்பாளர்களான சுலே பர்தா விலுள்ள பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட நமது விசுவாசப் பெண்கள் அனைவரும் ஆவியானவரின் உந்து தலினால் பிரத்யேகமாக நம்முடைய ஊழியத்திற்காக வாரம் ஒருமுறை ஜெபிப்பேன் என்று தீர்மானம் பண்ண தேவன் உதவி செய்தார். ஹர்பாடா கிராமத்திலுள்ள மீரூபேனின் மகனுக்கு நேர்ந்த இருசக்கர வாகன விபத்தி லிருந்து அவனைப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பம்னமாலிலுள்ள சுனில் பாய், சிச்சிநாகவ்தாவிலுள்ள அனில்பாய் மற்றும் போவாரியாவிலுள்ள நாதுபாய் ஆகியவர்களின் குடும்பங்கள் ஆசீர் வதிக்கப்படவும், சுவிசேஷத்தின் மீது அவர்கள் ஆர்வம் காட்டவும்; சுந்தா கிராமத்தைச் சார்ந்த சுனுபாயின் நிலத் தகராறு பிரச்சனையில் உறவினர் களிடையே சுமூகமான தீர்வு கிடைக்க; குட்காஸ் விசுவாசிகள் தேவனிடத்தில் புத்துயிர் பெறவும், மூன்று இடங்களில் நடக்கப்போகும் பெண்கள் கூடுகையை தேவன் ஆசீர்வதிக்கவும்; அனைத்து விசுவாசிகளும் எவ்வித தயக்கமும் இல்லாமல் தேவன் மீது தங்கள் நம்பிக்கையை ஒப்புக்கொள்ள முன்வர ஜெபிப்போம்.

## பிப்பள்வாடா சிறுமியர் விடுதி:

### ஹரிபாபு & பங்கஜம்

**துதிக்க:** நமது விடுதி மாணவர்கள் அனைவருக்கும் இணைய வழி வகுப்புகளைத் தொடங்க தேவன் கிருபை செய்தார். விடுதியின் அனைத்து தேவைகளையும் தேவன் அதினதின் காலத்தில் பூர்த்தி செய்தார். நமது மிஷனெரிகளான பங்கஜத்தைக் கோவிட்-19 நோயின் பாதிப்பிலிருந்தும், ஹரிபாபுவைத் தலைசுற்றலிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். 10-ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் வெற்றி பெற்று உயர்படிப்புக்குச் செல்ல தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலாதி, ஜாக்ருதி மற்றும் பிரதிக்ஷா ஆகிய மாணவர்கள் மருத்துவக்கல்லூரியில் இடம் கிடைக்க நடத்தப்படும் நீட் தேர்வில் வெற்றி பெற; விடுதிப்பிள்ளைகளின் பெற்றோர்கள் இரட்சிக்கப்பட; புற்றுநோய் காரணமாக சமீபத்தில் காலமான நமது விடுதி மாணவன் அங்கித்தின் குடும்ப உறுப்பினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## 19 செப்டம்பர்

ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குளோரி ராபர்ட் வில்லியம்
திரு. பிரத்யூஷ் நாயக்

### செலம்பா:

**ஏசுபாபு & உஷா**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. நனிநால் கிராமத்தைச் சார்ந்த விசுவாசிகளல்லாத 20 குழந்தைகள் நமது சிறுவர் வேதாகம வகுப்புகளில் தவறாமல் கலந்துகொள்கின்றனர். ஒல்காம் கிராமத்தில் நடந்த இளம்வாலிபர் கூடுகையை தேவன் ஆசீர்வதித்தார். நமது தேவ் மெஹ்ரா கிராமத்தின் விசுவாசி அனிதாபேனின் குடும்ப வாழ்வில் இருந்த பிரச்சனைகள் மாறி அவர்களுடைய கணவர் அவர்களை ஏற்றுக்கொண்டதினிமித்தம் குடும்பத்தில் அமைதியும் சமாதானமும் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராணிப்பூர் கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கு எதிர்ப்பாக வரும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; நனிநால் கிராமத்திலுள்ள நமது விசுவாசி ரவிபாய் எருதுகளை வாங்கும்போது நீதிமன்றத்தில் அவர் பேரில் பதிவுசெய்யப்பட்ட பொய்யான குற்றச்சாட்டு வழக்கிலிருந்து அவருக்குச் சுமூகமான தீர்வு கிடைக்க; பஞ்சாயத்தின் கீழ் நமது அனைத்து சபைகளையும் பதிவு செய்யும் செயல்முறை சுமூகமாக நடைபெற ஜெபிப்போம்.

### வட குஜராத்:

**தராம்பூர் & கெர்காம்:**
**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்**

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். குந்தியா கிராமத்திலுள்ள சோனியாபாய் இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதினிமித்தம் அவர் தனது சொந்த ஜனங்களின் மத்தியில் எதிர்ப்புக்குள்ளாகினபோதிலும் விசுவாசத்தில் நிலைத்திருக்க தேவன் உதவி செய்தார். நமது விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்க முடியாதபடி அவர்களுக்கு எதிராக பல எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டு டி.வி. நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பப்பட்டபோதிலும் விசுவாசத்திலிருந்து வழுவிப்போகாதபடி தேவன் அவர்களைப் பாதுகாத்தார். நமது பில்குகடி கிராமத்து விசுவாசிக்கு இரண்டு கால்களும் இல்லாத சூழ்நிலையில் அவருடைய வாழ்வாதாரத்திற்கு ஏற்ற அரசாங்க வேலையை கொடுத்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெர்காம், பிப்பள்காட், கிக்லி, பிபல்காட் ஆகிய கிராமங்களில் ஊழியத்திற்கான திறந்த வாசலை தேவன் கட்டளையிட; நமது விசுவாசி புஷ்பாபேன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; கோபா, சடவேரா ஆகிய இடங்களில் ஆலயக்கட்டுமானப்பணிகள் சீராக நடைபெற; பின்வாங்கிப்போன புல்வாடி கிராம விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## 20 செப்டம்பர்
### திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜோஹன் மால்தோ

### ஜாலோத்:

**பால்ராஜ் & கோயில் புஷ்பம்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. துன்கர் கிராமத்திலுள்ள தினேஷ்பாய், வஹிலா கிராமத்திலுள்ள பாபுபாய் ஆகியோர் புதிய தொடர்பாளர்களாக தேவனுடைய கிருபையால் நமக்குக் கிடைத்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜலாம்புரி கிராமத்திலுள்ள ரவ்ஜிபாய் சமீபத்தில் காலமானபடியினால் அவரது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காக; கவ்ஜிபேன் வயிற்றுக் கட்டியிலிருந்தும், விசுவாசி அனில்பாயின் மகன் மஞ்சள் காமாலை வியாதியிலிருந்தும் சுகமடைய; லக்கன்பூர் மதுவா மற்றும் வஹிலா கிராமங்களில் சபைகளின் கட்டுமானப்பணிகள் துவங்க முடியாதபடி காணப்படும் தடைகளை தேவன் விலக்கிப்போடும்படி கருத்தாய் ஜெபிப்போம்.

### மாண்சா:

**செல்லதுரை & கனகநேசம்**

**துதிக்க:** சாஜன்புரா பகுதியில் மீண்டும் சபை ஆராதனைகள் துவங்க தேவன் உதவி செய்தார். சன்மா, பர்மார், ரவோல் இன மக்கள் வாழும் கிராமங்களில் சுவிசேஷ வாசலை தேவன் திறந்துத் தந்ததோடு அநேகர் சுவிசேஷத்தின் மீது ஈடுபாடு கொள்ளவும் தேவன் உதவி செய்தார். சிதிராஜை இரத்தச் சோகையிலிருந்தும் ரஞ்சித்தை மனநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்தி காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதன் முறையாகச் சுவிசேஷத்தைக் கேட்ட ரதிவால்பாய் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுத் திருச்சபையில் இணைய; பண நெருக்கடியினால் அல்லல்படும் இக்கால கட்டத்தில் நமது விசுவாசிகள் வினோத்பாய், புஷ்பாவின் தேவைகள் சந்திக்கப்படவும்; கடன்களை அடைக்கவும் தேவன் வழிகளைத் திறக்க; ஹர்தீக்பாய் & ஆஷாபேன் மற்றும் நான்கு பிள்ளைகள் வாழ்வில் அமைதியும் சமாதானமும் நிலவ ஜெபிப்போம்.

### கடோத்: ராம்சிங்பாய் வசாவா & ஊர்மிளாபேன்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது புதிய தொடர்பாளர்களான சக்கங்பாய், தாராபேன், கிரன்பாய், ரோஹித்பாய், காஜல்பேன், விஷால்பாய், கரீமா பேன், தக்ஷாபேன் ஆகியோர் நமது ஜெபக்கூடுகைகளில் தவறாமல் கலந்து கொள்கின்றனர்; மகன்பாய் கஜ்ராபேன் ஆகியோருக்குக் காணப்பட்ட கோவிட்-19 னிலிருந்தும் பல்வேறு நோய்களிலிருந்தும் தேவன் பாதுகாத்தார். ஆயுஷை மலேரியா காய்ச்சலிலிருந்தும் சுகப்படுத்திய தேவாதி தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான நரேஷ் பாய் பிரியங்காபேன், ரதிபேன், சஞ்சய்பாய், சவிதாபேன், ராஜீபாய், உஷாபேன், தீன்பால்பேன், பாபுபாய், ரமீலாபேன், சனாபாய், தாராபேன், கிரன்பாய், ரோஹித் பாய், காஜல்பேன், விஷால்பாய், கரீஷ்மா பேன், தக்ஷாபேன் ஆகியோர் இரட்சிக்கப்பட; பின்வாங்கிப்போன பியூலாபாய் & மூனாபாய் நமது ஊழியத்திற்கு எதிராகப் பல விதங்களில் கொடுக்கும் இடையூறுகளிலிருந்து அவர்கள் மனந்திரும்ப பாரத்தோடு ஜெபிப்போம்.

## 21 செப்டம்பர்
### செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பிரசாந்த குமார்

### சொரம்பா: ரமேஷ் கிறிஸ்டியன் & ரேச்சல் ரமேஷ்

**துதிக்க:** தேவ்காத் கிராமத்தைச் சார்ந்த அர்ஜுபாய், ராஜ்வாட் கிராமத்திலுள்ள ரஸ்னா ஆகியோரைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். புதிதாக 2 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்களைச் சிறப்பாகச் செய்ய தேவன் உதவி செய்தார். இதன் விளைவாக 2 குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். அதர்வாடி கிராம வினுபேன் வயிற்றில் காணப்பட்ட கேன்சர் நோயிலிருந்தும், அன்குர் முதுகுவலியிலிருந்தும், பபில்பேன் நீண்ட நாட்களாகவுள்ள தலைவலியிலிருந்தும், பிஜ்லிபேன் மற்றும் கிரண்பாய் நெஞ்சு வலியிலிருந்தும் சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி வன்ஸ்தாவின் கணவர் சுதீர், தீபாபேனின் கணவர் அர்பித் தங்களது குடிப்பழக்கத்திலிருந்து மனம் மாறி இரட்சிக்கப்பட; ராஜ்வாட், அமீட், அமிட்டா, அமர்ட், விபுல் ஆகியோர் இரட்சிக்கப்படவும், சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காண்பிக்கவும்; விமேஷ்பாய் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

### போடேலி: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** சர்திந்தா கிராமத்திலிருந்து புதிதாக இரண்டு நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். புதிதாக கலாடுலி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தேவன் இப்பகுதியில் மக்களுக்குத் தேவையான நல்ல மழையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். நமது விசுவாசி பின்ஜாரிபேன் கருச்சிதைவினால் 4 குழந்தைகளை தங்களுடைய வாழ்வில் இழந்தனர், ஜெபத்தின் பலனால் மகனையும் மகளையும் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்தாரா கிராமத்திலுள்ள நமது விசுவாசி சம்னிபேட்டாபாய் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் நிலைத்து நிற்க; ரஸ்தம்புராவிலுள்ள துளசிபாய் பொல்லாத குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; புதிய விசுவாசி மீனாபேன் நெஞ்சு வலியிலிருந்தும், தலா கிராமத்தின் கந்தாபேன் அடிக்கடி கண் இமைகளை மூடும் வியாதியிலிருந்தும் குணமாக; கந்தன்பூர் கிராமத்திலுள்ள ராஜுபாய் குடும்பத்தினரும், கலாடுலி கிராம மக்களும் இரட்சிக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.

### *விசுவாசத்தினால் விவசாயத்திற்குத் தேவையான மழை கிடைத்தது!*

*மகாராஷ்டிரா மாநிலம், எட்டப்பள்ளி பணித்தளத்திலுள்ள நமது விசுவாசிகள் நெல் சாகுபடிக்கு முன்பு விசேஷித்த ஜெபங்களை ஏறெடுப்பது வழக்கம். அவ்வாறு ஹலேவாரா கிராமத்தைச் சார்ந்த திரு. சந்துரு குடும்பத்தினர் நெல் விதைக்கும் முன் பக்கத்து கிராம விசுவாசிகளுடன் இணைந்து உபவாசித்து ஜெபித்தனர். அடுத்த நாள் அவர்கள் நெல் விதைக்கத் தொடங்கியபோது, வயலில் தண்ணீர் மிகவும் குறைவாக இருந்தது. வெயில் அதிகமாகக் காணப்பட்டது. மழை வருகிறதற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லை. ஆனால் அக்குடும்பத்தினர் விசுவாசத்தோடு ஜெபித்து, விதைகளை விதைத்துவிட்டு வீட்டிற்குச் சென்றனர். என்ன ஆச்சரியம்! அன்று இரவு நல்ல மழையை தேவன் கட்டளையிட்டார்; அந்த விசுவாசக் குடும்பத்தினர் எலியாவின் தேவன் ஜெபத்தைக் கேட்டு மழையினால் பதில் தந்ததை நினைத்து தேவனைத் துதித்தார்கள். அல்லேலூயா!*

**22 செப்டம்பர்**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

## தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

### சில்வாசா :

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** புதிதாக 3 குடும்பங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். பாம்பு கடித்த 19 விசுவாசிகளையும் தேவன் அற்புதவிதமாகச் சுகமாக்கினார். பாத்பூர் ஆலயக்கட்டுமானப்பணியில் மேல் கூரை போடும் வேலை நல்ல முறையில் முடிந்தது. நமது சபையின் மூப்பர் தேவுபாய் தாமாகவே முன்வந்து தேவனு டைய ஆலயம் கட்டப்பட தன்னுடைய நிலத்தை வழங்கியுள்ளார். இப்படிப்பட்ட உதவியாளர்களை எழுப்பித் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஓஜ்கர் ஆலயத்தின் மீதி யான கட்டுமானப்பணிகள் துரிதமாய்க் கட்டி முடிக்கப்பட; சிக்காலி ஆலயத்தின் மூப்பர் ஆலயம் கட்ட நிலம் கொடுக்கக் கருத்தாய் ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### கான்தேஷ்பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி & நேர்:

**அஜய்குமார் லிமா & பிரத்யாசினி**

**துதிக்க:** புதிதாக 18 கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. புதிதாக ஒரு நபர் இயேசுகிறிஸ்துவண்டை வந்துள்ளார். பழைய ஏற்பாடு மொழிப் பெயர்ப்பு கான்தேஷ்பீலி மொழியில் நன்றாக நடக்கிறது. யோனா புத்தகத்தை மொழிப்பெயர்த்து முடிக்கவும், எஸ்தர், 1 சாமுவேல் புத்தகத்தை எழுத ஆரம் பிக்கவும் தேவன் உதவி செய்தார். பின்வாங்கிப்போன 4 விசுவாசிகள் மறு படியும் விசுவாசத்திற்குள் வந்தனர். சக்ரி கிராமத்தில் மீண்டும் சபை ஆராதனைகள் தொடங்கியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகள் அனை வரும் கான்தேஷ்பீலியில் மொழிப் பெயர்க்கப்பட்ட வேதாகமத்தைத் தவறாமல் வாசிக்க; நமது பணித் தளங்களில் உள்ள திருச்சபை மக்கள் விசுவாசத்தில் பலப்பட; தெலாரி மற்றும் ஹரிஜன் இனத்தைச் சேர்ந்த மக்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள்வர; மால்பூர் மற்றும் கம்பீர் கிராமங்களில் விரைவில் ஆலயங்கள் கட்டப்பட; தெலாரி சமூகத்தைச் சேர்ந்த எர்கோன் கிராமத்தைச் சேர்ந்த சவீதா பிகா சரக் என்ற 8 வயது சிறுமிக்கு ஒன்றரை வயதிலிருந்தே அழுகிய நிலைமை யிலிருக்கும் கால் சுகமடைய; மால்பூர் கிராமத்தைச் சார்ந்த சகரம் மாலியின் குருட்டுத்தன்மை மறைய; நமது விசுவாசி நந்தினி பொல்லாத ஆவியிடமிருந்து விடுதலை பெற; ஸ்வப்னிலுக்கு நடந்த விபத்தில் தகப்பனார் இறந்துவிட்ட நிலையில் தன்னுடைய காலும் முறிந்து காணப்படும் இவரின் சுகத்திற்காகவும் மனஆறுதலுக்காகவும் ஜெபிப்போம்.

## 23 செப்டம்பர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் விஜயராஜ்
திருமதி. லூர்து மேரி கிரி பாபு
திருமதி. ஜாஸ்மின் கவிதா டென்சிங்

### சித்தாரா பிராந்தியம் :
**சஞ்சீப் குமார் & ஸ்வர்ணலதா**

**துதிக்க:** புதிதாக 51 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பாக வரும் எதிர்ப்பாளர்களிடமிருந்து தேவன் நமது மிஷனெரி சன்னமல்லப்பா மற்றும் சுதேச ஊழியர் ஸ்ரீராமைப் பாதுகாத்தார். நமது விசுவாசிகளான பாரதி மற்றும் ஸ்ரவனுக்குப் பொருத்தமான வாழ்க்கைதுணைகளை தேவன் அமைத்துக்கொடுத்தார். ரோஹி கிராமத்தில் மீண்டும் ஆராதனைகள் நடத்தப்படவும்; பான்வா கிராமத்தில் புதிய திருச்சபை துவங்கவும் உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான கிசான், அமாஸ்யா மற்றும் ருமால் சிங் மது அருந்துவதிலிருந்து விடுவிக்கப்படவும், இயேசுவை அவர்களின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; விசுவாசிகள் கள்ள உபதேசங்களுக்கு ஆளாவதற்குத் தூண்டப்படுவதால் விசுவாசத்தில் வழுவிப்போகாமல் பெலப்பட; பவ்ரி மற்றும் நொய்ரா கிராமத்திலுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பன்சேமால் பணித்தளத்தில் நற்செய்தியை எதிர்ப்பவர்கள் மனந்திரும்ப; தனசிங் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், ஹைவேர்கெடாவிலுள்ள ப்ரீதி மஞ்சள் காமாலையிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

### சுர்கானா:
**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** சாங்கிர் மற்றும் உம்பச்சபாடா கிராமத்திலிருந்து புதிதாக 23 நபர்கள் இயேசுகிறிஸ்துவின் மீதான விசுவாசத்தை அறிக்கையிட்டனர். சுகாபூர் கிராமத்தைச் சார்ந்த ஹர்ஷத் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். பிலுக்பாடா கிராமத்திலுள்ள சந்திர காசிநாத் வஸ்லே மனநோயிலிருந்து சுகமானார். அம்பட்டா கிராம திருச்சபை ஆராதனைகளில் அநேகர் வந்து கலந்துகொள்வதோடு, வேத வசனத்தையும் ஆர்வமுடன் கேட்க தேவன் கிருபை பாராட்டுகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உம்பர்காடா கிராமத்தில் உள்ள விசுவாசிகள் யாவரும் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தைத் தைரியமாயும், தடையில்லாமலும் அறிக்கையிட; இக்கிராமத்தில் சுவிசேஷத்தை எதிர்க்கும் எதிர்ப்பாளர்களினால் நமது விசுவாசிகள் புறமத திருவிழாக்களுக்கு நன்கொடை அளிக்குமாறு பலவந்தப்படுத்தப்படுகிற சூழ்நிலைகள் மாறவும், இவர்களெல்லாரும் மனந்திரும்பவும்; உத்மால் கிராமத்திலுள்ள ஊர்மிளாபாயின் சுகப்பிரசவத்திற்காகவும், புதிய விசுவாசியான நனுபாய் வயிற்றுவலியிலிருந்து சுகமடையவும் ஜெபிப்போம்.

## 24 செப்டம்பர்
### வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிர்மலா மித்ரன்
திருமதி. சாந்தி லால் கிரிஷான் குமார்
திருமதி. சனம் ஜாய்ஸ் வினோத்

### பிம்பள்நேர்: பாபுராஜ் & மேபல்

**துதிக்க:** புதிதாக போத்ரா, நவபாடா, புனியச்சபாடா ஆகிய 3 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாவாபூர், ரோனிடு, விஜய்பூர் ஆகிய இடங்களிலிருந்து அநேக மூப்பர்கள் இணைந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். ஒடியா கிராமத்தில் புதிதாக ஒரு குடும்பத்தினர் நமது ஐக்கியத்தில் இணைய தேவன் உதவி செய்தார். பட்டேல் இனமக்கள் நம்முடைய ஜெபங்களில் அதிக விருப்பமுள்ளவர்களாக அதில் கலந்து கொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விஜய்பூர் கிராமத்திலுள்ள சுவி சேஷ எதிர்ப்பாளர்கள் அநேகர் இரட்சிக்கப்பட; பின்மாற்றத்தில் போன மூப்பர் ஜெயராம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; உம்ரே, டிஹேவ், டெஹாம் கிராமங்களில் மாலைநேர ஜெபக்கூடுகைகளைத் துவங்க தேவன் உதவி செய்தார். புலம் பெயர்ந்துள்ள நமது விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ள; நமது சுதேச ஊழியர் மோகனை ஊழியப்பாதையில் தேவன் ஒரு வல்லமையுள்ள பாத்திரமாய் எடுத்துப் பயன்படுத்த பாரத்தோடு ஜெபிப்போம்.

### ஜிம்மலாகட்டா: ஸ்ரீனிவாசா & சுனிதா

**துதிக்க:** பின்தொடர்பணி வாயிலாக புதிதாக 8 கிராமங்களைச் சந்திக்க தேவன் கிருபை செய்தார். 3 கிராமங்களில் "தேடுவோர் முகாம்" நடத்தப்படவும், அநேகர் சுவிசேஷ வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவும் தேவன் உதவி செய்தார். சமீபத்தில் ஏற்பட்ட நமது விசுவாசி ராஜேந்திர பெளர்குட் மரணத்தினால் மனமுடைந்து காணப்பட்ட குடும்பத்தினரை தேவன் விசுவாசத்தில் பெலப்படுத்தின அவருடைய அன்பிற்காக நாம் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாஹா வேலதி, சின்கா, கரிகா ஆகியோரின் குடும்பத்தினர் யாவரும் இரட்சிக் கப்பட; கிஷ்டாபூர் திருச்சபை ஊழியங்களை எதிர்க்கும் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; கோயா கந்த் இனமக்கள் மத்தியில் சுவிசேஷ வாசலை தேவன் திறந்துத் தர; நமது விசுவாசி பெண்டட்டம்மாவின் நிலம் விற்பதில் காணப்படும் பிரச்சனை சுமூக மாகத் தீர்க்கப்பட ஜெபிப்போம்.

### முக்காடா: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** புதிதாக 36 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் அடைக்கலம் நாடி வந்துள் ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாலர்படா கிராம சகாராமிற்கு நீண்ட நாளாக இருக்கும் வயிற்றுவலியிலிருந்தும், கோச் கிராம பிரபாகரையும் போக்த்ரி கிராம லதாபேனை யும் பெலவீனப்படுத்திக்கொண்டிருந்த நெஞ்சு வலியிலிருந்தும் சுகப்படுத்தி ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போஸ்ரா, பார்சிமேடு, கோச், நந்துகாவ், ஷாகிரி, சலார்படாரி ஆகிய கிராமங்களில் நடைபெறப் போகிற வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளில் நமது விசுவாசிகள் கலந்து கொண்டு வேத அறிவில் தேறினவர்களாய்க் காணப்பட; போஸ்ராவிலுள்ள 50 குழந்தைகளின் கல்வி மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கோச் கிராமத்திலுள்ள பார்வதிபேன் மற்றும் பார்சிமேடு கிராமத்தைச் சேர்ந்த சவீதா தீய ஆவிகளின் பிடியிலிருந்து விலக; பொக்ரதீ கிராம கல்பேஷ் நாள்பட்ட தீராத வயிற்றுவலியிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

## 25 செப்டம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கணேசன் M. (எ) சாமுவேல் கணேஷ்
திரு. ஆல்பர்ட் பிரபாகரன்

# கர்நாடகா

## கஜேந்திரகடா:

### மஞ்யா நாயக் & ரத்னா

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது தன்னார்வ ஊழியர் தீபாவுக்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டார். நமது விசுவாசி காண்டுவிற்கு ஏற்பட்ட பெரிய விபத்திலிருந்து தேவன் அற்புதமாகப் பாதுகாத்தார். மனுலா புதிதாக துணி வியாபாரம் செய்யவும், வீரேஷிற்கு வீடு கட்டுவதற்கான கடன் வங்கியின் மூலம் கிடைக்கவும் உதவி செய்த தேவனை நன்றியோடு துதிப்போம்.

**ஜெபிக்க:** நிங்கம்மாவின் நிலம் விற்கப்படுவதற்கு சுமூகமான சூழ்நிலை ஏற்பட; ரத்னம்மா மனநோயிலிருந்தும், 9 வயது சிறுவன் பிரதீப் இரத்த தொற்றிலிருந்தும் குணமடைய; நமது விசுவாசி சுஜிதாவிற்குச் சொந்தமாக ஒரு வீடு கட்டுவதற்கான நிலத்தையும் பணத்தேவைகளையும் தேவன் சந்திக்க ஜெபிப்போம்.

### நிடகுந்தி: நரேந்திர குமார்

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷ வசனங்களால் சந்திக்கப்பட்டுள்ளது. நந்து ரத்தாட்டை மரணப்படுக்கையிலிருந்து தேவன் தொட்டு சுகமாக்கினார். வாலிபர் முகாமில் அநேக வாலிபர்கள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். பசவராஜ் தான் வேலை செய்யும்பொழுது அவர் இயக்கிய இயந்திரத்திலிருந்து கீழே விழுந்தபோதிலும் மரணம் நேராதவாறு ஜீவனைப்பாதுகாத்து கொடுத்த தேவாதி தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் பிள்ளைகளான சக்குபாய், உஷா, ராஜு, கவிதா ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைதுணைகள் அமைய; நிண்டகண்டி கிராமத்தில் ஊழியத்திற்கான திறந்த வாசலை தேவன் தர; 30-க்கும் அதிகமான பேர் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்ட; நமது விசுவாசி பசவராஜ் லிங்காயத் உணவகம் நிறுவினதினால் ஏற்பட்ட 14 இலட்சம் ரூபாய் கடன்களை அடைக்க தேவன் வழி வாசல்களைத் திறந்து கொடுத்து ஆசீர்வதிக்கும்படி ஜெபிப்போம்.

## பேய்மழையால் ஆவிக்குரிய பின்மாரியைத் தடுக்க முடியவில்லை!

*சத்தீஸ்கட் மாநிலம், காட்கோரா பணித்தளத்திலுள்ள ரஹால் கிராமத்தில் நமது மிஷனெரி புதிய விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகை நிகழ்ச்சியொன்று ஒழுங்கு செய்திருந்தார். ஆனால் அன்று காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை கனமழை பெய்தது. கனமழை இருந்தபோதிலும், ஏறக்குறைய 35 பேர் இக்கூடுகையில் வந்து கலந்துகொண்டனர். பிற்பகலில் மழை குறைந்ததால் அவர்கள் யாவரும் ஆற்றிற்குச் சென்றனர். ஆற்றிலும் மிகுந்த வெள்ளம் ஏற்பட்டது. தேவனுடைய கிருபையால் அவ்வெள்ள ஆபத்தினின்று அவர்கள் பாதுகாக்கப்பட்டனர். மேலும் 8 நபர்கள் அன்று கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## 26 செப்டம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரெபேக்காம்மா பால்
திரு. செய்கோதாங் ஜெள

### கௌரிபித்தனூர்:
**ஃப்ரான்சிஸ் துரைசாமி & ஜெயந்தி**

**துதிக்க:** பிஸ்லாஹலி, பைச்சாபுரா, திம் கட்னாஹலி ஆகிய 3 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோவிட் -19 நோய்த் தொற்றிலிருந்தும், அதன் மூலம் வந்த நரம்பு பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கி ஜீவனைத் தந்தார்; நமது விசுவாசி ராஜேஷின் திருடுபோன இருசக்கர வாகனம் ஜெபத்தின் மூலம் தேவன் திரும்பக் கிடைக்கச் செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பைச்சாபுரா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி கங்கம்மாவிற்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் மூலமாக வரும் எதிர்ப்புகள் மத்தியில் அவர் கிறிஸ்துவில் நிலைத்திருக்க; பின்மாற்றமடைந்துள்ள இளம்விசுவாசிகளான அஜய், பிரபு, ஜேம்ஸ், நாகேந்திரா மற்றும் சிலர் மனந்திரும்பி மறுபடியும் நமது ஊழியத்தில் இணைய; பின்மாற்றமடைந்துள்ள மூப்பர்களான நரசிம்ம ரெட்டி, ராமகிருஷ்ணப்பா, கங்கப்பா, மனோஜ் மீண்டும் சபை பொறுப்புகளை எடுத்து உற்சாகமாய்ச் செய்ய; நமது விசுவாசி நாகேந்திரர் வங்கித்தேர்வில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு கிடைத்து ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### ஷிறஹட்டி: ஆஷாபிரப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** நமது விசுவாசி சித்தன்னா டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மரணப்படுக்கையிலிருந்தபோது தேவன் அவரைத் தொட்டு சுகமாக்கினார். சுஜாதாவை மலேரியா நோயிலிருந்து தேவன் சுகமாக்கினார். எல்லம்மாவின் ஜெபம் கேட்டு கணவர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும்போது நேர்ந்த விபத்தில் வாகனம் நிலைகுலைந்த வேளையிலும் மரணம் நேராதபடி அவரைச் சுகத்துடன் பாதுகாத்து வீடு கொண்டு வந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது அதிக ஆர்வம் காட்டுகின்ற நமது புதிய தொடர்பாளர்களான இர்ரனா, சந்திரனா, அசோக், ரமேஷ் மற்றும் 10 நபர்களுக்காக; கோவிட்-19 நோய்த்தொற்றினால்பாதிக்கப்பட்டு கணவரை இழந்திருக்கும் ரேணுகாவின் மன ஆறுதலுக்காக; பீமாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்க ஜெபிப்போம்.

### *வெண் குஷ்டம் நீங்கியது!*

*மகாராஷ்டிரா மாநிலம், நேர் பணித்தளம். கலாம்பீர் கிராமத்தைச் சார்ந்த சுரேகாபாய் கடந்த 2 ஆண்டுகளாக அவரது முழு உடலிலும் வெள்ளை புள்ளிகளை உருவாக்கும் ஒருவகையான தொழுநோயால் அவதிப் பட்டுக்கொண்டிருந்தார். அவர் பல மருத்துவர்களிடமும், மந்திரவாதிகளிடமும் அழைத்துச் செல்லப்பட்டும் ஒன்றும் பயனில்லை. கடைசியாக கலாம்பீர் திருச்சபையில் புதன்கிழமை தோறும் நடக்கும் உபவாச ஜெபக் கூடுகைக்கு அழைத்துவந்து ஜெபித்தனர். ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும் தேவன் அவருடைய மகிமையினால் தொட்டு சுகமாக்கினார். சுகமடைந்ததற்கு அடையாளமாக இப்போது அவரது சரீரத்தில் எந்தவொரு வெண் புள்ளியும் இல்லை. அதன் விளைவாக அவரது குடும்பத்தைச் சார்ந்த 9 நபர்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். இந்தக் குடும்பம் மிகவும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இனத்திலிருந்து முதன்முதலாக இயேசுவை ஏற்றுக்கொண்ட இக்குடும்பத்திற்காக தேவனைத் துதிப்போம். துதி, கனம், புகழ் எல்லாம் இயேசுவுக்கே!*

## 27 செப்டம்பர்
திங்கள்

### முண்டர்கி:
**தாங்லால் ஜெள**

**துதிக்க:** புதிதாக இரண்டு நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது விசுவாசி துர்கேஷிற்கு வறுமையின் மத்தியிலும் சொந்தமாக ஒரு வீட்டைக் கட்ட உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி ஹனுமாவா இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டதால் தன்னுடைய குடும்பத்து நபர்களால் அநேகவிதமான எதிர்ப்பு களைச் சந்தித்தாலும் விசுவாசத்தில் நிலை நிற்கவும்; ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரவும்; சபை ஆராதனையில் கலந்து கொள்ள கூடாதென்று எதிர்ப்பு தெரிவித்து தடைசெய்கிற தேவராஜின் தகப்பனாரின் மனந்திரும்புதலுக்காக; 6 குடும்பங்கள் போக்குவரத்து பற்றாக்குறையினால் நமது சபை ஆராதனைகளில் கலந்துகொள்ள முடியாமலிருக்கும் இந்த நிலை மாற பாரத்தோடு ஜெபிப்போம்.

### ஷிக்காவ் & முண்ட்கோட்:
**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். நிர்மலாவிற்குப் பக்கவாதத்திலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். நமது விசுவாசி மஞ்சுவிற்கு அரசாங்க திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடு ஒன்று சொந்தமாகக் கிடைக்க தேவன் உதவி செய்தார். ஷைலா வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்தபோதும் தீப்பிடித்து எரியாதவாறு தேவன் பாதுகாத்தார். கனமழை காரண மாக அணை உடைந்துபோகும்போது அங்கிருந்த கமலாவின் பெற்றோர் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் மரணப்படுக்கையில் இருக்கும் சிவாண்டாவிற்கு தேவன் முற்றிலுமாகச் சுகத்தைக் கொடுக்கும்படி; நமது புதிய விசுவாசியான 22 வயது நிரம்பிய கங்கம் மாவின் பிரிந்துபோன கணவர் மனம் மாறி மறுபடியும் இணைந்து வாழ; பக்கவாதத்தினால் வேலையை இழந்து, அதனால் குடும்பத்தின் ஒரே வாழ்வா தாரத்தையும் இழந்து தவிக்கும் நமது புதிய தொடர்பாளர் கங்கையாவை தேவன் சீக்கிரத்தில் குணமாக்க பாரத்தோடு ஜெபிப்போம்.

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** நந்த்காட் திருச்சபை ஆராதனை களில் புதிதாக 4 நபர்கள் கலந்து கொள்கின்றனர். கிரிஜம்மாவைப் பொல் லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவித்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அறுவை சிகிட்சை செய்யப் பட்டிருக்கும் நமது மிஷனெரி வினய ராஜுக்கு பூரண சுகம் கிடைக்கவும், மறு படியும் ஊழியத்தில் வல்லமையாய்ச் செயல்படவும், அடிமைப்பட்டுக் கிடக்கிற வியாதியிலிருந்து குணப்படுத்தப்படவும்; 5 வயது சிறுவன் சரியாக நடக்க முடியாத சூழ்நிலை மாறவும், மான்களின் கால்களைப் போலாக்குகிற தேவன் அச்சிறுபிள்ளைக்கும் பூரண சுகத்தைக் கொடுத்து நன்றாய் நடக்க உதவி செய்யும்படி கருத்தாய் ஜெபிப்போம்.

## 28 செப்டம்பர்
செவ்வாய்

# ஆந்திரப் பிரதேசம்

### சித்தூர் பிராந்தியம்:
**சத்தியப்பா & ஷியாமளாபாய்**

**துதிக்க:** ஊரடங்கிற்குப் பின் நமது அனைத்து திருச்சபைகளிலும் ஆராதனைகளை மறுபடியும் துவங்க தேவன் உதவி செய்தார். நமது மிஷனெரிகள் அனில் மஹாலி & பிரஷாந்தி திருமணத்தை தேவன் சிறப்பாக நடத்தி ஆசீர்வதித்துக்கொடுத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலைமைத்துவ பயிற்சி மையம் ஒன்றமைக்கப்பட்டு, அதில் நமது சுதேச ஊழியர்கள் தன்னார்வ ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான பயிற்சிகள் கூடிய சீக்கிரம் நடத்தி பயிற்றுவிக்கப்பட; பி. கொத்தகொட்டா பகுதியில் நமது ஊழியத்தை விரிவாக்கம் செய்ய ஒரு நல்ல சுதேச ஊழியர் பணியமர்த்தப்பட ஜெபிப்போம்.

### குப்பம்: பால் குப்புசாமி & சைலா

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். அக்ரஹாரத்தைச் சேர்ந்த சுரேஷ் நமது கடிபள்ளி ஆலயத்திற்குப் புதிதாக வந்து தேவனை ஆராதிக்கிறார். நமது விசுவாசி மது & முருகன் தம்பதியினருக்குத் திருமணமாகி 5 ஆண்டுகளுக்குப் பிறகு மழலைசெல்வத்தைக் கொடுத்து தேவன் ஆசீர்வதித்தார். மித்ராபள்ளி சபையைச் சார்ந்த சுரேஷிற்கு நடந்த தீ விபத்தில் சிறிய காயங்களுடன் உயிர் தப்ப தேவன் கிருபை ஈந்தார். நமது விசுவாசி சத்யபிரியாவின் கணவர் ஒரு மாதத்திற்கு முன்பு கோவிட்-19 னால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அத்தம்பதியரை பிள்ளை செல்வத்தினால் தேவன் மகிழ்ச்சியாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி சம்யுக்தாவின் கருவில் மூன்று குழந்தைகள் இருப்பதால் தேவன் நல்ல பாதுகாப்பான சுகப்பிரசவத்தைக் கட்டளையிட; K.C. பள்ளி கிராமத்தில் உள்ள சபைக்கு விரோதமாக எழும்பும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; நமது விசுவாசி கார்த்திக் ஓமன் நாட்டில் ஊரடங்குக் காலத்தில் இழந்த வேலையை மீண்டும் பெற; குமாரி & ரமேஷ்பாபு, மணியம்மா & சரவணன் ஆகியோரின் குடும்ப வாழ்க்கையில் சமாதானமும் அன்பும் நிலவ ஜெபிப்போம்.

## *நெற்றி பாம்பின்மேல் பட்டாலும், பாம்பால் தீண்டப்படவில்லை!*

*ஹிமாச்சலப் பிரதேசத்திலுள்ள ராம்பூர் பணித்தளத்தில் பத்ராஸ் கிராமத்தைச் சேர்ந்த நமது பெண் விசுவாசி பூல் மாயா, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ஹிமாச்சலத்தின் சதுப்பு நிலத்தில் காணப்படும் லிங்கர் செடிகளின் தண்டைச் சேகரிப்பதற்காகப் புதர்கள் நிறைந்த அடர்ந்த காட்டுக்குள் சென்றார். அவர் குனிந்து அச்செடிகளைப் பறித்துக் கொண்டிருக்கையில் தன் நெற்றியில் ஜில்லென்று ஏதோ பட்டதுபோல் உணர்ந்தார். ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் மீண்டும் குனிந்துப் பறித்தபோது முன்பு ஏற்பட்ட அதே குளுமையான தொடுதலை உணர்ந்தார். உடனே நிமிர்ந்துப் பார்த்தபோதுதான் அது 6 அடி நீளமுள்ள ஒரு பாம்பு என்றும், ஒவ்வொரு முறையும் குனியும்போது அவரது நெற்றி பாம்பின் மேல்தான் பட்டது என்பதையும் அறிந்தவுடன் தாமதமின்றி வீட்டிற்குப் பயத்துடன் விரைந்தார். ஒருவேளை அந்தப் பாம்பு நெளிந்து திரும்பி அவரைத் தீண்டியிருக்கலாம். ஆனால், அது அவரை எதுவும் செய்யவில்லை. பாம்பின் விஷக்கடிக்குப் பூல் மாயா தெய்வாதீனமாகத் தப்பினார். பூல் மாயாவை விஷப்பாம்பின் கடிக்குத் தப்புவித்த தேவாதி தேவனுக்கு மகிமை உண்டாவதாக!*

## 29 செப்டம்பர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏஞ்சல் மார்கிரெட் சாமுவேல்
செல்வி. சுஷாஜிதா சேனாபதி

### பலமநேர்: அனில் மஹாலி, டேனியல் சேனாபதி

**துதிக்க:** முசலமடுகு சபையிலுள்ள பின்வாங்கிப்போன விசுவாசிகள் தேவனுடைய இரக்கத்தினால் மறுபடியும் நமது சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்துகொள்கிறார்கள். G.V. பள்ளி மீனாவைக் கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து பாதுகாத்து ஜீவனைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சம்பர்பூர் கிராமத்தில் அநேக மக்கள் கோவிட் – 19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டுக் காணப்படுவதால் ஆலயங்கள் திறக்கப்படாமல் இருக்கிற இந்தச் சூழ்நிலை சீக்கிரத்தில் மாறவும், நோய்த்தொற்று கிருமிகள் முற்றிலும் அழிக்கப்படவும், சபைகள் திறக்கப்படவும்; நமது விசுவாசிகளின் பிள்ளைகள் காவ்யா, பவன், கணேஷ், மீனா, புவனேஷ்வரி, மதுஸ்ரீ ஆகிய இளம்வாலிபர்களுக்குத் தேவையான நல்ல வாழ்க்கைதுணைகளையும், கிறிஸ்தவ முறைப்படி திருமணங்கள் நடைபெறவும் தேவன் உதவி செய்யும்படி ஜெபிப்போம்.

### சி.கே. பள்ளி: தேபதத்தா லிமா & சோனியா ராணி ஜெனா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. மேடபுரம் கிராமத்து விசுவாசி பிந்துவைக் குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்தார். நமது விசுவாசி உமாதேவி தனக்கென்று சொந்தமாக ஒரு வீட்டைக்கட்ட தேவன் உதவி செய்தார். சந்திரா, மோசஸ் ஆகியோருக்குக் குடும்ப வாழ்வாதாரத்திற்குத் தேவையான ஒரு நல்ல வேலையைத் தந்து தேவன் ஆசீர்வதித்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் வாயிலாகத் தொடப்பட்ட மக்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து இணைய; இனி நடக்கப்போகும் அனைத்து நிகழ்ச்சிகளும் தடையில்லாமல் நடத்தப்பட; நமது விசுவாசிகளின் பிள்ளைகள் காவ்யா, ஷாரணிற்கு ஏற்ற நல்ல வாழ்க்கைதுணைகளை தேவன் அமைத்துக் கொடுக்க ஜெபிப்போம்.

### கிறிஸ்துவின் அவயவங்களாய் இசைந்திருப்பதன் பாக்கியம்!

*ஜார்க்கண்ட் மாநிலத்தில் சந்தால் சீஷத்துவப் பணியில் திலாய்பானி திருச்சபையின் மூப்பர் திரு. மத்தியாஸ் கிஸ்குவின் மனைவி திடீரென்று நோய்வாய்ப்பட்டு மிகவும் மோசமான நிலையிலிருந்தார். எனவே, அவர்கள் வயலில் போய் வேலை செய்யச் சிரமப்பட்டனர். திடீரென்று அவர் மனைவி மரித்து தேவனுடைய ராஜ்யத்திற்குச் சென்றுவிட்டார். அவருடைய மரணத்திற்குப் பிறகு புதன்கிழமை உபவாச ஜெபத்திற்கு நமது விசுவாசிகள் கூடினர். நமது மூப்பர் தனது மனைவியை இழந்த துக்கத்தில் வீட்டில் தங்கிவிடாமல் உபவாச ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டார். இவருக்கு 4 சிறு குழந்தைகள் உண்டு. திருச்சபை மக்கள் தாங்களாகவே ஆலோசித்து அவருடைய விவசாயப்பணியில் அவருக்கு உதவ முன் வந்தனர். இந்த வார்த்தைகளைக் கேட்ட மூப்பர், "கிறிஸ்துவை அறியாத மக்கள்-இப்போது நான் தனியாக இல்லை; எனக்கு உதவ 'திருச்சபை' எனும் குடும்பம் இருக்கிறது என்பதை அறிந்து கொள்வார்கள்" என்று கூறி தேவனை மகிமைப்படுத்தினார். சபையாரின் இச்செயல் அக்கிராம மக்களை வியப்பிற்குள் ஆழ்த்தியது. சோர்ந்துபோன மூப்பரும் சரீரத்திலும், ஆவியிலும் ஆத்துமாவிலும் பெலனடைய பேருதவியாக இருந்தது. எல்லா துதியும் இயேசுவுக்கே உண்டாவதாக!*

## 30 செப்டம்பர்

வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தும்பா சௌதுரி ஓம் பிரகாஷ்

# தமிழ்நாடு

### அஞ்செட்டி:
### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** புதூர், கோவள்ளி, ஜீவநாதம், கோரிபாளையம், ராஜர் கோவில் ஆகிய 5 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. 6 மாதங்களுக்கு முன்பு நமது விசுவாசி மாற்கு மகாலிங்கத்தின் காணாமல் போன பசு மாடு ஜெபத்தின் பலனால் மீண்டும் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்கள் முன்வந்து கிறிஸ்துவுக்குள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; ராகுல், மனாசேயிற்கு காது கேளாத மற்றும் பேச முடியாத ஊமை நிலைமையிலிருந்து தேவன் அவர்களைக் குணமாக்க; கோட்டையூர் கிராம ஆலயக்கட்டு மானப்பணி துவங்கப்பட; தக்கம்பட்டி, அஞ்செட்டி, கோட்டையூர், உரிகம், பீர்ணாபள்ளி, தண்டியாம் இன்னும் பல கிராமங்களில் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட; நமது விசுவாசிகளான ஏஞ்சலின் மடானா, பிரேமா, அனிதா, ஷியாமளா, தனியா ஆகியோர் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட; சரோஜா, ரவி, லலிதா, செல்வி, முத்தம்மா, ராஜ் பரிமளம், பிரேமா, செல்வராஜ், மகேஷ் ஜோதி முருகன், சரஸ்வதி, லக்ஷ்மணன், கண்ணகி, சின்னம்மா, பரந்தாமன், விமல் ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிக்கப் படவும், தேவனுடைய மந்தைக்குள் சேர்க்கப்படவும் கருத்தாய் ஜெபிப்போம்.

### தமிழ்நாடு மண்டல அலுவலகம்:
### ஆல்பின் & விஜயராணி

**துதிக்க:** புதிதாக 27 நபர்கள் இயேசுவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். வயது முதிர்ந்த தம்பதிகளான இம்மானுவேல் & விஜயலக்ஷ்மி தாமாகவே முன்வந்து நமது ஊழியத்தைத் தாங்க வாஞ்சையுடன் காணப்படுகின்றனர். மரகட்டாவிலுள்ள தீவிர விசுவாசியான ரத்னம்மாவின் மருமகன் மற்றும் பேத்திக்கு நேர்ந்த லாரி விபத்திலிருந்து தேவன் அதிசயமாக அவர்களைப் பாதுகாத்த அவரது அன்பை நினைத்து துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகச் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகிற தபால்மேடு பகுதி வித்யாவின் கணவர் கோவிட்-19னால் பாதிக்கப்பட்டு மரித்துப்போனதினி மித்தம் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வழியை தேவன் உண்டாக்கித் தர; பெரும்பாலை கிராமத்தில் புதியதாக ஊழியத்தைத் துவங்க; நமது விசுவாசி வள்ளியின் கணவர் குப்புசாமி இரட்சிக்கப்படவும், நுரையீரல் தொற்றிலிருந்து தேவன் அவரைச் சுகமாக்கவும்; மகாலக்ஷ்மியின் மகன் மருத்துவர்களால் கைவிடப்பட்ட சூழ்நிலையில் மரணப்படுக்கையிலிருந்து அவன் உயிர்பிழைக்க கண்ணீரோடு ஜெபிப்போம்.

மிஷனெரி ஆல்பம்

# 364

அருள்திரு. தௌஜபாவ் குயிட்டே, மணிப்பூர், பால்பங் கிராமத்தில் வசிக்கும் கிறிஸ்தவப் பெற்றோர்களான திரு. ஜம்கோகாய் குயிட்டே மற்றும் திருமதி கிம்கோனெங்கி ஆகியோரின் பத்து பிள்ளைகளில், 6-வது மகனாக 01.04.1977 அன்று பிறந்தார். இவருக்கு 1994-ம் ஆண்டு வரை, இரட்சிப்பின் அனுபவம் இல்லா திருந்தது. ஒருசமயம் நடந்த மூன்று கிராம பழங்குடி இன மக்களின் மோதலின் போது, இவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட இரவு இவர் சிறைக்குள் தூங்க இயலாமல் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கலானார். அப்பொழுது பரிசுத்தாவியானவர் இவரிடம் மிகத் தெளிவாகப் பேசினார், இதன் வாயிலாக அவ்வேளையிலேயே சகோ. தௌஜபாவ் தனது பாவத்தை அறிக்கைச் செய்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தனது வாழ்வின் இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்பு, இவருக்கு மறுநாள் காலையில் ஆச்சரியப்படும்படியாக ஜாமீன் கிடைத்து, இவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இவர் தனது 2-ம் ஆண்டு பி.ஏ. சமூகவியல் படிப்பைப் படித்துக்கொண்டிருக்கும்போது, முழுநேர ஊழியத் திற்கான தேவனின் அழைப்பைப் பெற்றார். 2003-ம் ஆண்டில் மணிப்பூரிலுள்ள உக்ருலில் வைத்து நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்துக்கொண்டபோது, மிஷனெரிப்பணிக்கென தன்னை முழுமை யாக ஒப்புக்கொடுத்தார். பின்னர் ஏப்ரல் 2007-ல் இவர் தனது நெருங்கிய நண்பர் ஒருவர் மூலமாக FMPB ஊழியங்களைக் குறித்து அறிந்ததோடு, FMPB நடத்திய நேர்காணலில் கலந்துக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் இவர் ஒரு வருட மிஷனெரிப்பயிற்சிக்காக ஜான்சியிலுள்ள நமது மிஷனெரிப்பயிற்சி மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதன்பின் 2008 -ம் ஆண்டு மே முதல் 2009 மார்ச் வரை பஞ்சாப் பிராந்திய அலுவலகத்தில் பணியாற்றினார்.

சகோதரி ஃப்ளாரன்ஸ் லாம்வுங், மணிப்பூர் பீ. கல்ஜாங் கிராமத்தில் வாழும் கிறிஸ்தவப் பெற்றோர்களான திரு. பி. கைகாம் மற்றும் திருமதி ஹௌகோடன் ஆகியோரின் 11 பிள்ளைகளில் 9-வது மகளாக 01.08.1979 அன்று பிறந்தார். இவர் 1987-ம் ஆண்டு ஜனவரியில் தனது சொந்த கிராமத்தில் வைத்து நடத்தப்பட்ட ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவக்கூடுகையில் கலந்துக்கொண்ட போது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தனது வாழ்வின் இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவரது தாயாரின் உருக்கமான ஜெபமும், தனது மகள் மிஷனெரியாகச் செல்லவேண்டும் என்று அவர் கொடுத்த ஆலோசனையும், அதோடுகூட தீராத மூக்கு இரத்தப்போக்கிலிருந்து சகோதரி ஃப்ளாரன்ஸுக்கு கர்த்தர் கொடுத்த அதிசய சுகம் பெற்ற அனுபவமும் 1999-ம் ஆண்டு இவர் தனது வாழ்வை முழுநேர ஊழியத்திற்காக அர்ப்பணிக்க வழிவகுத்தது. இவர் தனது M.Div., இறையியல் படிப்பை முடித்த பின்னர், ஜுன் 2006 முதல் ஜுலை 2008 வரை நமது ஜார்க்கண்ட் - பந்தேனி பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றினார். பின்னர் இவர், சகோ. தௌஜபாவ் குயிட்டேக்கு நிச்சயிக்கப்பட்டு, 02.08.2008 அன்று ஒரு வருட மிஷனெரிப்பயிற்சிக்காக ஜான்சியிலுள்ள நமது மிஷனெரிப்பயிற்சி மையத்திற்கு அனுப்பப்பட்டார்.



அருள்திரு. தௌஜபாவ் குயிட்டே & திருமதி ஃப்ளாரன்ஸ் லாம்வுங் குடும்பம்

23.04.2009 அன்று திரு. தௌஜபாவ் குயிட்டே & திருமதி ஃப்ளாரன்ஸ் லாம்வுங்கின் திருமணம் சிறப்பாக நடந்தது. பின்னர் இவர்கள் 2009 மே முதல் 2011 செப்டம்பர் வரை ஹிமாச்சலப்பிரதேசத்தின் ரோஹ்ரு பணித்தளத்திலும், 2011 செப்டம்பர் முதல் 2013 செப்டம்பர் வரை தரம்ஷாலா பணித்தளத்திலும், 2013 செப்டம்பர் முதல் 2020 ஜுன் வரை ஆனி பணித்தளத் திலும் பணிபுரிந்து வந்தனர். தற்போது இவர்கள் ஹிமாச்சலப்பிரதேசத்திலுள்ள ராம்பூர் பணித்தளத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இம்மிஷனெரித் தம்பதியரை தேவன் இரண்டு மகன்களால் ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் சாமுவேல் குயிட்டே (DOB: 15.03.2010) 5-வது வகுப்பிலும் மற்றும் இளைய மகன் ஜோயல் குயிட்டே (DOB: 14.04.2015) மழலையர் பள்ளியிலும் (K.G.) படித்து வருகிறார்கள்.

இந்த மிஷனெரிக் குடும்பத்தை அனுதினமும் நமது ஜெபங்களில் ஆதரிப்போம்.

## மிஷனெரி ஆல்பம் 365

சகோ. எட்வர்ட் ஜெபசிங் 28.08.1983-ல் கிறிஸ்தவப் பெற்றோரான திரு. ஜோசப் செல்வராஜ் & திருமதி எஸ்தர் அன்னமரியாள் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவரது தந்தை நமது இயக்கத்தின் ஜெபக்குழுத்தலைவராக இருந்ததினிமித்தம், இவர் சிறுவயதிலிருந்தே கண்டிப்புடன் கிறிஸ்தவப் பண்பில் வளர்க்கப்பட்டார். இவர் தனது 10-ம் வகுப்பைப் படித்துக் கொண்டிருக்கும்போது, விக்கிரமசிங்கபுரத்திலுள்ள தங்களது ஆலயத்தில் வைத்து நடைபெற்ற ஒரு வாலிபர் முகாமில் உரைக்கப்பட்ட கர்த்தரின் திருவசனமாகிய நீதி.28:13-ன் மூலம் உள்ளத்தில் தொடப்பட்டு, கிறிஸ்துவைத் தனது சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்டார். இவர் தனது கல்லூரி படிப்பை 2005-ல் முடித்து, அவ்வாண்டிலேயே நடைபெற்ற நமது தமிழ்நாடு மாநில முகாமில் கலந்துக்கொண்டு நமது வாலிபர் குழுவின் மூலம் அங்கு அரங்கேறிய “பக்தி நிறைந்த தேசம்” என்ற ஒரு நடனப்பாடலின் வழியாக தேவ ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றார். எனவே, முழுநேர மிஷனெரிப் பணிக்கென தன்னை அர்ப்பணித்து, 2006-ல் நமது இயக்கத்தில் தன்னார்வ ஊழியராக முதலில் இணைந்தார். பின்பு சில மாதங்கள் நமது சுவிசேஷ ரத குழுவினரோடும், அதன்பின் 2007 மே மாதம் வரை சென்னை அயனாவரத்திலுள்ள நமது அலுவலகத்திலும் பணிசெய்தார். பிறகு 13.06.2007-ல் நமது இயக்கத்தில் முழுநேர மிஷனெரியாக இணைந்து, ஜான்சியிலுள்ள நமது மிஷனெரிப்பயிற்சி மையத்தில் ஓராண்டு மிஷனெரிப்பயிற்சியைப் பெற்றார். பின் பிப்ரவரி 2011-ம் ஆண்டு வரை நமது தலைமைச் செயலகத்திலுள்ள HRD மற்றும் PREM பிரிவுகளில் ஊழியம் செய்தார்.

சகோதரி ஆக்னஸ் எபனேசர், தமிழ்நாடு, தூத்துக்குடி மாவட்டம், மெஞ்ஞானபுரம் என்ற பகுதியைச் சொந்த ஊராகக் கொண்ட கிறிஸ்தவப் பெற்றோரான திரு. டேவிட் சாலமோன் & திருமதி ஜெயா அவர்களுக்கு இளைய குமாரத்தியாக 16.03.1988-ல் பிறந்தார். ஆயினும், இவரது பெற்றோரின் அரசாங்கப் பணிகளினிமித்தம் சென்னையிலேயே தங்கி வளர்ந்து வந்தனர். ஏசாயா 49:16-ன் மூலம், இவர் தனது 12-ம் வயதிலேயே இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின் இவர் தனது பெற்றோரோடும் மற்றும் நமது இயக்கத்தின் பிற ஜெபக்குழுத்தலைவர்களோடும் சேர்ந்து 5 முறை நமது வடஇந்திய மிஷனெரிப் பணித்தளங்களுக்குச் செல்லும் சிலாக்கியத்தைப் பெற்றார். இவர் தனது பள்ளிப்படிப்பை முடித்து, கல்லூரி படிப்பைத் துவங்கும் காலக்கட்டமாகிய 2005-ல் அதிக நேரத்தை வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் செலவிட்டார். அச்சமயம் இவர் ஏசாயா 6:8-ன் மூலம் ஊழியத்திற்கான தேவ அழைப்பைத் தன்னுள்ளத்தில் உணர்ந்தார். எனவே ஆண்டவரிடம், தனது கல்லூரி பட்டப்படிப்பை முடித்தவுடன் ஊழியத்தில் முழுநேர பணியாளராக இணைவதாக வாக்குக்கொடுத்தார். இவர் தான் கொடுத்த வாக்கின்படியே, 2009-ல் தனது B.E., படிப்பை முடித்தவுடன், 29.07.2009-ல் நமது இயக்கத்தில் முழுநேர ஊழியராக இணைந்தார். பின்பு, 1 1/2 வருடங்கள் மிஷனெரிப்பயிற்சிக்காக ஜான்சிக்கு அனுப்பப்பட்டு, இடையே 3 மாதங்கள் மகாராஷ்டிராவிலுள்ள ஆலப்பள்ளி சிறுவர் விடுதியிலும் பின்னர், நவம்பர் 2010-ல் பயிற்சி நிறைவு பெற்றப்பின் ஒருமாதம் சென்னை அயனாவரம் பகுதியில் விரிவுப்பணியிலும் பணிசெய்தார்.

தேவ நியமப்படி, 16.12.2010-ல் சகோ. எட்வர்ட் ஜெப சிங்கும், சகோதரி ஆக்னஸ் எபனேசரும் திருமணத்தில் இணைந்தனர். அதன்பின் 12.02.2011-ல் ராஜஸ்தானி லுள்ள ரத்தன்கார் பணித்தளத்திற்கு அனுப்பப்பட்டு, பின்பு சில மாதங்கள் ஆல்வார் பணித்தளத்திலும் ஊழியம் செய்தனர். பிறகு மார்ச் 2013 முதல் செப்.2014 வரை ஜான்சியிலுள்ள பணித்தள அலுவலகத்தில் பணியாற்றினர். மீண்டும் ஜனவரி 2017வரை ஆல்வார் பணித்தளத்தில் பணிசெய்தனர். தற்போது ஜான்சியில் பணித்தள ஆய்வு & ஆவணங்கள் சேகரிப்பு பிரிவில் பணிசெய்து வருகின்றனர். கர்த்தர் இவர்களுக்கு இருபிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் கிறிஸ் ஜாபேஸ் லிவிங்ஸ்டன் (DOB:29.10.2011) 3-ம் வகுப்பிலும், இளைய மகள் கிறிஸ்டா மிச்செல் ஸ்லேசர் (DOB:14.07.2014) UKG - யிலும் படித்து வருகின்றனர்.

இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அன்றாடக ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.



**திரு. எட்வர்ட் ஜெபசிங் & திருமதி ஆக்னஸ் எபனேசர் குடும்பம்**

# மிஷனெரி ஆல்பம் 366

தமிழ்நாடு, கோயம்புத்தூரிலுள்ள ஒரு சிற்றூரில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவப் பெற்றோரான திரு. செல்லதுரை & திருமதி ஜோதிமணி ஆகியோருக்கு மூத்த மகனாக 03.05.1969-ல் சகோ. விக்டர் ஜெயசீலன் பிறந்தார். இவரது பெற்றோர் இருவரும் TELC பள்ளியில் ஆசிரியப்பணி செய்து வந்தனர். இவர் 1990-ல் தனது கல்லூரி படிப்பைப் (B.Sc., in Maths) படித்துக் கொண்டிருக்கும்போது, சேலத்தில் வைத்து நடைபெற்ற EU முகாமில் இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். மீண்டும் 1993-ல் தனது முதுகலைபட்டப் படிப்பைப் (M.Sc.,B.Ed.,) படித்துக் கொண்டிருக்கும்போது நடந்த EU முகாமொன்றில் தன்னை முழுநேர ஊழியனாக தேவப்பணிக்கு ஒப்புக்கொடுத்தார். பின்பு மிஷன் பள்ளிகளில் பணிபுரிய ஆசிரியர்கள் தேவையென்ற விளம்பரத்தை FMPB அறைகூவல் பத்திரிக்கையில் பார்த்ததின் விளைவாக FMPB ஊழியத்திற்கு விண்ணப்பித்தார். அதன்பொருட்டு, சென்னையிலுள்ள FES பள்ளியில் ஓராண்டு ஆசிரியராகப் பணியாற்றினார். அச்சமயத்தில் திரு. சத்யாசிங் தனராஜ் மற்றும் அருட்திரு. R. ஜாண் கிருபாகரன் ஆகியோர் மூலம் வடஇந்திய மிஷனெரிப்பணிக்கு ஊக்குவிக்கப்பட்டார். எனவே, ஜார்க்கண்டிலுள்ள நமது பந்தேனி பள்ளியில் பணிபுரிய முன்னோடி மிஷனெரி ஆசிரியராக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கே கணிதப்பாடத்தை மாணாக்கர்களுக்கு நன்கு கற்றுக்கொடுப்பதற்கும், அப்பள்ளியில் இன்று வரை தலைமை ஆசிரியராகச் செயலாற்றுவதற்கும் தேவன் அநுக்கிரகம் செய்து வருகிறார்.

சகோதரி பிரின்ஸஸ் நகோமி, கிறிஸ்தவப் பெற்றோரான திரு. செல்லதுரை & திருமதி குளோரி ஆகியோருக்கு மகளாக 03.07.1969-ல் பிறந்தார். இவரது பெற்றோர் நல்ல விசுவாசிகளாகவும், FMPB ஊழியத்திற்கு தீவிர ஆதரவாளர்களாகவும் இருந்ததினால், ஆவிக்குரிய விதத்தில் இவர் சிறுவயதிலிருந்தே நன்கு வளர்க்கப்பட்டார். அதற்கும் மேலாக இவரது பெற்றோர் இவருக்கு அநேக மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறுகளைக் கற்றுக்கொடுத்ததோடு, FMPB-யில் ஊழியம் செய்யும் ஊழியர்கள் ஒவ்வொருவரின் பெயர்களைச் சொல்லி ஊழியர்களுக்காக அனுதினமும் ஜெபிக்கவும் சொல்லித் தந்தனர். இவர் 10 வயது சிறுமியாக இருக்கும்போது இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தன்னை அவருடைய பணிக்கென ஒப்புக்கொடுக்கும் சிலாக்கியத்தைப் பெற்றார். பள்ளி மற்றும் கல்லூரி நண்பர்கள் மத்தியில் ஓடும் இரயில் வண்டியில் கூட ஜெபக்குழு ஆரம்பித்து நடத்தினார். பின்பு 1989-ல் FMPB-யின் வாலிபர் குழுவில் இணைந்தார். பின்பு அச்சமயத்தில் பீஹாரிலுள்ள மக்கள் மத்தியில் ஊழியப்பணி செய்யும்படி தேவனிடத்திலிருந்து சிறப்பு அழைப்பு பெற்றார். அதன்படி பிப்ரவரி 1991-ல் பீஹாரிலுள்ள மால்தோ இன பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் ஒரு முன்னோடி மிஷனெரியாகப் பணியாற்ற கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்தார்.

26.05.1997-ல் தேவ நியமப்படி, சகோ. விக்டர் ஜெயசீலனுக்கும் சகோதரி நகோமிக்கும் திருமணமாகி, கிராமப்புறங்களில் வசிக்கும் மால்தோ இன மக்கள் மத்தியிலும், அவ்வின மக்களின் குழந்தைச் செல்வங்களுக்கு கல்வி கற்றுக்கொடுப்பதிலும் குடும்பமாக தீவிர வாஞ்சையுடன் செயல்பட்டு வருகின்றனர். தேவன் இத்தம்பதியருக்கு இரண்டு மகன்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். இவர்களது மூத்த மகன் மோசஸ் எஸ்லி (DOB: 20.12.1999) தற்போது சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் MSW பட்டப்படிப்பும், இளைய மகன் சீகன்பால்க் ஜாஷ்வா (DOB: 28.06.2008) தனது 7-ம் வகுப்பு படிப்பையும் படித்து வருகின்றனர்.

இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அன்றாடக ஜெபங்களில் நினைவுகூருவோம்.



திரு. விக்டர் ஜெயசீலன் & திருமதி பிரின்ஸஸ் நகோமி குடும்பம்

## மிஷனெரி ஆல்பம் 367

தமிழ்நாடு, அரியலூர் மாவட்டம், காணிக்கைபுரம் கிராமத்தைச் சார்ந்த கிறிஸ்தவப் பெற்றோரான திரு. ஜெயகுமார் & திருமதி பிரேமா என்பவர்களுக்கு மூத்தப் புதல்வனாக சகோ. ஜென்னிஸ் 06.01.1980-ல் பிறந்தார். இவரது தகப்பனார் ஒரு ஜெபக் குழுத்தலைவர். எனவே, இவரது பெற்றோர் இவரை சிறுவயதிலிருந்தே ஆவிக்குரிய விதத்திலும், மிஷனெரிப்பணியைக் குறித்த கரிசனையிலும் நன்கு வளர்த்தமையால், கர்த்தரின் ஏற்ற நேரத்தில் இவர் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்பு தேவ ஊழியத்திற்கு இவர் தன்னை ஆயத்தப்படுத்தும் பொருட்டு, இறையியலில் பட்டப்படிப்பு (B.Th.,) படிப்பதற்காக வேதாகம கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதன்பின், இவரது பெற்றோரின் தீராத வாஞ்சையும் இடைவிடாத ஜெபமும், இவரை மிஷனெரிப்பணிக்கென அர்ப்பணிக்க தூண்டிற்று. எனவே, 2004-ல் நமது இயக்கத்தில் இவர் மிஷனெரியாக இணைந்து உத்திரப்பிரதேசத்திலுள்ள நமது மிஷனெரிப்பயிற்சி நிலையத்தில் ஓராண்டு பயிற்சிப் பெற்ற பின்பு ஜார்க்கண்டிலுள்ள சந்தால் இனமக்கள் மத்தியிலும், நமது தலைமைச் செயலகத்திலும் பணியாற்றினார்.

சகோதரி சுகந்தி புஷ்பம், தமிழ்நாடு-விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த சாத்தூரிலுள்ள சின்னகொல்லப்பட்டியில் வசிக்கும் கிறிஸ்தவப் பெற்றோராகிய திரு. கருணாகரன் & திருமதி ரூபி விஜயா அவர்களுக்கு 2-வது மகளாக 30.11.1984-ல் பிறந்தார். தனது பள்ளிப்பருவத்தில் இவரை இருமுறை தேவன் மரணத்தருவாயிலிருந்து காப்பாற்றியமையால் இவரை இவரது பெற்றோர் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தனர். இவரும் தனது மரணப்படுக்கையில் கர்த்தரின் அற்புதவல்லமையை அனுபவித்ததினால், இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பெற்றோரின் அர்ப்பணிப்பைக் கனப்படுத்தும் வண்ணமாக, இவரும் தகுந்த நேரத்தில் தன்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். பின்பு, 10.06.2004-ல் முழுநேர ஊழியராக நமது இயக்கத்தில் இணைந்து, குஜராத்திலுள்ள வியாராவில் சிறுவர் ஊழியத்தில் பணிபுரிந்தார். பின்பு உத்திரப்பிதேசத்தில் ஓராண்டு மிஷனெரிப்பயிற்சிக்குப்பின், 2007-ம் ஆண்டு வரை ஜார்க்கண்டிலுள்ள நமது கங்குபாரா சிறுவர் விடுதியில் பணிசெய்து வந்தார்.

சகோ. ஜென்னிஸ் ஜெயகுமாரும் சகோதரி சுகந்தி புஷ்பமும் தேவசித்தப்படி 25.01.2008-ல் திருமண பந்தத்தில் இணைந்தனர். பின்பு, குடும்பமாக 2011-ம் ஆண்டு வரை ஆந்திரப்பிரதேசத்திலுள்ள பலமநேர் பணித்தளத்திலும், 2015-ம் ஆண்டு வரை சென்னை தலைமைச் செயலக அலுவலகத்திலும், தற்போது மேற்கு வங்காளத்திலுள்ள மெகிலிகஞ்ச் பணித்தளத்தில் ராஜ் போன்ஸி மக்களினம் மத்தியில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

தேவன் இத்தம்பதியருக்கு ஆணொன்றும், பெண்ணொன்றுமாக அழகிய இரட்டைக் குழந்தைகளை 09.02.2013-ல் ஆசீர்வாதமாக ஈந்துள்ளார். இவர்களது மகன் பென்னி ஜாஷ்வாவும், மகள் பெட்சி ஜெருஷாவும் டோனாவூரிலுள்ள நமது சந்தோஷ வித்யாலயாவில் 3-ம் வகுப்பு படித்து வருகின்றனர்.

இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபங்களில் தவறாமல் நினைவுகூருவோம்.



திரு. ஜென்னிஸ் ஜெயகுமார் & திருமதி சுகந்தி புஷ்பம் குடும்பம்



# அருமையான அண்ணாச்சியின் ஆழமான அர்ப்பணிப்பு!

அது ஓர் அழகிய குளிர் காலம்!
மளிகைக்கடை அண்ணாச்சியும் நானும்
உண்டியல் காணிக்கை பிரிக்க
ஊர் ஊராய்... தெரு தெருவாய்...
சந்து பொந்துகளில்
சைக்கிள் சவாரி – சென்ற
உன்னத காலம்.

அரை சதம் தாண்டிய அண்ணாச்சி
சைக்கிள் கேரியரில்
அழகாய்ப் பூத்துண்டு விரித்து
என்னை அமர்த்தி
மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க
ஏற்ற இறக்கங்களில்
சைக்கிள் மிதித்த சரித்திர காலம்.
இளைஞன் – எனது
இதயம் குத்தப்பட்டு,
இறங்கி – சைக்கிள் மிதிக்கக் கேட்டாலும்...,
புன்சிரிப்பை உதிர்த்து
"உட்காருங்க, தம்பி!" – என
உற்சாகம் கூறி ஊழியம் செய்த
உன்னத காலம்.

உண்டியல் பிரித்திடும்
சொற்ப நேரத்தில் ஒட்டுமொத்த
ஊழியக் காரியத்தை நயம்பட சுவைப்பட
எடுத்துச்சொன்ன பக்குவம்,
கேட்பவரின் கண்களைக்
குளமாக்கிடும் மந்திர வித்தை
பரமன் இவருக்குப்
பரிசாகக் கொடுத்தது.

காற்று நிரம்பிய காணிக்கை பெட்டி
காசு கொடுக்க மறந்தாலும்,
பாசக்கார அண்ணாச்சி –
ஏனோ பாரத்தோடு
ஜெபிக்க மறந்ததில்லை.

விளம்பரம் இல்லா ஊழியத்தை
விருப்பத்தோடும்...
விசுவாசத்தோடும் செய்து,
கொண்டதை மனநிறைவாய்க்
கொடுத்து கோபுரமாய்த் திகழ்ந்தவர்.

அனைவரும் உறங்கியப் பிறகு
அரிசி மூட்டை சந்தில்
அழகாய்... நேர் முழந்தாளிட்டு
அந்த மாத அறைகூவல் வைத்து
அக்கறையோடு அழுது ஜெபித்தவர்.
'ஜாமக்காரன்' என்ற வார்த்தையைத்
தனக்குச் சொந்தமாக்கியவர்.

பட்டுப்போன – இந்த
பட்டு மரம் – இன்று
பரமனின் பாதத்தில்.
இவர் விதைத்தது... இன்று
விரிந்துப் படர்ந்து
பல ஆயிரம் பட்சிகளுக்குப்
பட்சணம் கொடுக்கும்
பெரு விருட்சமாய்...
விண்முட்டுகிறது.

இவர் போன்ற
பல நூறு அண்ணாச்சிகள்
இன்னும்... அரிசி, பருப்பு,
மசாலா மணத்தோடு
கூகுல் சொல்லா குறுகிய சந்துகளில்
பாரகான் செருப்புப் பாதத்துடன்
பரமனுக்காய்ப் பயணிக்கின்றனர்.

களப்பணியின் கர்ம வீரர் – இவர்
பெரும் பாக்கியம் பெற்றவர்!
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்,
என்றும்! ... எப்பொழுதும்!

**– அருள்திரு. பிரபாகரன் N.**
மிஷனெரி, ஜார்க்கண்ட்

Regd. Newspaper for India No.17759/69

**Online Banking**

# நிதி அலுவலகத்திலிருந்து

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***